بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 11

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

இதழ் 21

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - துல் ஹஜ் 03

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - ஹிஜ்ரத் 21 ★ 21 மே - 2026

## அல்லாஹ்வின் கட்டளை

يَاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡۤا اِذَا تَدَايَنۡتُمۡ
بِدَيۡنٍ اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى .......
وَاللّٰهُ بِكُلِّ شَىۡءٍ عَلِيۡمٌ ○

நம்பிக்கை கொண்டவர்களே உங்களுள் ஒருவர் மற்றவரிடம் ஒரு காலக் கெடுவைக் குறிப்பிட்டுக் கடன் வாங்கினால், அதனை எழுதிக் கொள்ளுங்கள். எழுதக் கூடியவர் உங்களுக்கிடையில் நீதத்துடன் எழுத வேண்டும். எழுதுபவர் எழுதுவதற்கு மறுக்கக் கூடாது. ஏனெனில் அல்லாஹ் அவருக்கு கற்றுக் கொடுத்துள்ளான்........அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கு அறிபவனாவான். (2:283)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நபிமொழி

### கடனை அடைப்பதற்கான துஆ

عَنْ عَلِيٍّ رَضِيَ اللّٰهُ عَنْهُ اَنَّ مُكَاتَبًا جَآءَهٗ فَقَالَ : اِنِّيْ عَجَزْتُ عَنْ كِتَابَتِيْ فَاَعِنِّيْ قَالَ : اَلَا اُعَلِّمُكَ كَلِمَاتٍ
عَلَّمَنِيْهِنَّ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : لَوْ كَانَ عَلَيْكَ مِثْلُ جَبَلٍ دَيْنًا اَدَّاهُ اللّٰهُ عَنْكَ ، قُلْ : اَللّٰهُمَّ اكْفِنِيْ
بِحَلَالِكَ عَنْ حَرَامِكَ وَاَغْنِنِيْ بِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ ۔ (ترمذی کتاب الدعوات باب جامع الدعوات)

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னாரிடம் ஓர் அடிமை வந்தார். என்னால் எனது விடுதலைக்கான தொகையைச் செலுத்த முடியவில்லை. தாங்கள் எனக்கு உதவி செய்யுங்கள் என்று வேண்டினார். அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்குக் கற்றுத் தந்த சில வார்த்தைகளை உனக்குக் கற்றுத் தரட்டுமா?; மலை அளவு உனக்குக் கடன் இருந்தாலும், இந்த துஆவின் பரக்கத்தால் அல்லாஹ் அதை நிறைவேற்ற ஏற்பாடு செய்து விடுவான். நீ இவ்வாறு துஆ செய்! என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்:

‘ எனது அல்லாஹ்வே! ஹராமான வழிகளில் இருந்து என்னைக் காத்து, உன்னுடைய ஹலாலான வாழ்வாதாரத்தைக் கொண்டு எனக்குப் போதுமானவனாக்கு! உன்னுடைய அருளால் உன்னைத் தவிர மற்றவர்களிடம் கையேந்தாதவாறு என்னைப் பிறரிடம் இருந்து தேவையற்றவனாக்குவாயாக!

( ஹதீக்கத்துஸ் ஸாலிஹீன், ஹதீஸ் எண்: 835)

* * * * * * * * * * *

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்

### மனிதன் தனது வாழ்வாதாரத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் அதன் மூலம் வட்டிக்குக் கடன் வாங்கும் நிலை ஏற்படாது

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

இறைவன் மீது நம்பிக்கை வைப்பவருக்கு, இறைவன் ஏதேனும் ஒரு மறைமுக வழியில் உதவி செய்கிறான். மக்கள் இந்த ரகசியத்தைப் புரிந்துகொள்வதில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும். வட்டிக்குக் கடன் வாங்கும் நிலைக்கு ஓர் இறையச்சம் உடையவரை இறைவன் ஒருபோதும் தள்ளுவதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். திருட்டு அல்லது விபச்சாரம் எவ்வளவு பெரிய பாவமோ, அதேபோன்றதுதான் வட்டி கொடுப்பதும், வாங்குவதும் ஆகும். இதனால் செல்வம் அழிவதுடன் மரியாதையும், ஈமானும் கூடப் போய்விடுகிறது.

அன்றாட வாழ்க்கையில் வட்டிக்குக் கடன் வாங்கி செலவு செய்யும் அளவுக்கு நிர்பந்தத்திற்குள்ளாக்கும் அப்படி எந்தவொரு விவகாரமும் இல்லை. உதாரணமாகத் திருமணம். இதில் செலவுகள் ஏதுமில்லை. இரு தரப்பினரும் சம்மதித்து நிக்காஹ் முடிந்து விடுகிறது. அதன் பிறகு வலீமா விருந்து என்பது சுன்னத் ஆகும். ஒருவருக்கு அதற்கு வசதி இல்லை என்றால் அதுவும் மன்னிக்கப்பட வேண்டியதாகும். மனிதன் சிக்கனத்தைக் கடைப்பிடித்தால் அவனுக்கு எந்த நஷ்டமும் ஏற்படாது. மக்கள் தங்கள் மன இச்சைகளுக்காகவும், தற்காலிக மகிழ்ச்சிக்காகவும் இறைவனைக் கோபப்படுத்திக் கொள்கின்றனர். இது அவர்களின் அழிவுக்குக் காரணமாகிறது.

வட்டியின் தீமை எவ்வளவு கடுமையானது என்பதைப் பாருங்கள்! மக்கள் இதைப் புரிந்துகொள்வதில்லை. பன்றி இறைச்சியை உண்பது கூட இக்கட்டான நிலையில் (உயிரைக் காக்க) அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் வட்டிக்கு அத்தகைய அனுமதி இல்லை. (தஃப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை))

* * * * * * * * * * *

## தஃப்ஸீரே கபீரிலிருந்து

### பரஸ்பர தொடர்புகளை பாழ்படுத்திக் கொள்ளாதீர்கள். கடன் கொடுக்கும்போது அல்லது வாங்கும்போது திருக்குர்ஆனின் வழிகாட்டுதல்களை நினைவில் கொள்ளுங்கள்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்-பகராவின் 283-வது வசனத்திற்கு விளக்கம் அளிக்கும்போது கூறுகிறார்கள்:

மேற்குறிப்பிட்ட வசனங்களில் சமுதாய அழிவிற்கான ஒரு முக்கிய காரணியாக வட்டி குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது சமுதாயத்தின் வீழ்ச்சிக்கான இரண்டாவது காரணத்தை இங்கே கூறுகிறேன். அது யாதெனில், கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் மக்கள் எச்சரிக்கையுடன் செயல்படுவதில்லை. கடன் கொடுக்கும்போது நட்பு மற்றும் அன்பின் காரணமாக எவ்வித காலக்கெடுவையும் நிர்ணயிப்பதில்லை. மேலும் அதை எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்வதுமில்லை. பின்னர் பணம் திரும்ப வராதபோது, சண்டைகள் தொடங்கி வழக்குகள் வரை நிலை செல்கிறது. இறுதியில் அனைத்து நட்பும் பகையாக மாறுகிறது.

அல்லாஹ் கூறுகிறான்:

‘உங்களுக்குள் பரஸ்பர தொடர்புகளை கெடுத்துக் கொள்ளாதீர்கள். கடன் கொடுக்கும்போது அல்லது வாங்கும்போது இந்த இரண்டு கட்டளைகளை நினைவில் கொள்ளுங்கள்:

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்..

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

## கடன் வாங்குபவர் மற்றும் கடன் பெறுபவர் தொடர்பான இஸ்லாமிய போதனைகள்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

நமது நாகரிக மற்றும் சமூக வாழ்க்கையின் ஒரு முக்கியமான அம்சம் கொடுக்கல் வாங்கல் எனும் விவகாரம் ஆகும். மனிதனுக்கு தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஒருவர் மற்றவருடைய உதவி தேவைப்படுகிறது. ஆனால், இதேக் கொடுக்கல் வாங்கல் கடன் வடிவில் இருக்கும்போது, அது சமூகத்தில் மிகப்பெரிய பிரச்சினைகளை உருவாக்கி விடுகிறது. சகோதரர்களுக்கு இடையே பகைமை ஏற்பட்டு விடுகிறது. நண்பர்களுக்கு இடையே சண்டை, சச்சரவுகள் வெடிக்கின்றன; இதுவே வணிக நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் மட்டத்தில் செல்லும் போது, சில நேரங்களில் அவமானம் மற்றும் இழிவு ஏற்படும் நிலைக்குச் சென்றுவிடுகிறது.

எனவே, தன்னை ஒரு நம்பிக்கையாளர் என்றும், இறைவனின் அடியான் என்றும் கூறிக் கொள்ளும் ஒருவருக்கு, சமூகத்தின் இந்த தீமையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான கட்டளையை அல்லாஹ் வழங்கியுள்ளான். அடுத்து, சண்டைகள், அவமானங்கள் மற்றும் இழிவுகளில் இருந்து எவ்வாறு தப்பிக்கலாம்? என்பதற்கான வழிமுறையையும் கூறிவிட்டான். கடன் கொடுத்த பிறகு அதை எப்படி திருப்பிக் கேட்க வேண்டும்? என்று இஸ்லாம் கடன் கொடுக்கக் கூடியவர்களுக்கும் கூறிவிட்டது. அதேபோல், கடன் வாங்கியவர்கள் அதை எவ்வாறு அழகிய முறையில் திருப்பிச் செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்தியவாறு சமூகத்தில் தமது அந்தஸ்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்? அல்லது தனது அந்தஸ்தை எப்படி உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதையும் விளக்கியுள்ளது.

திருக்குர்ஆன் இந்த அளவிற்கு மனித உளவியலை மிக ஆழமாகக் கருத்தில் கொண்டவாறு, கடன் வடிவில் அமையும் கொடுக்கல், வாங்கலின் போது கணக்குகளை வைத்துக் கொள்வதற்கான வழிமுறையைக கற்றுத் தந்துள்ளது. நோக்கம் நல்லதாக இருக்கும் பட்சத்தில், இரு தரப்பினரும் பிரச்சனைகளை சந்திப்பதற்கான கேள்வியே எழாது.

அல்லாஹ் கூறுகிறான்: நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் ஒரு குறிப்பிட்ட காலத் தவணையின் மீது கடன் ஒப்பந்தம் செய்து கொண்டால், அதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.'

(அல்-பகரா: 283).

இப்போது பாருங்கள்! இது எவ்வளவு அழகான கட்டளையாகும்!

'எங்களுக்கிடையே அதிக நம்பிக்கை இருக்கிறது; எழுதுவதற்கு என்ன தேவை?; நாங்கள் சகோதரர்களைப் போன்றவர்கள் அல்லவா?' என்று சில மக்கள் கூறிவிடுகின்றனர். எழுதுவதன் பொருள் நம்பிக்கையின்மை' அல்ல. மாறாக, அவ்வாறு எழுதாமல் விடும்போதுதான் எதிர்காலத்தில் மனக்கசப்புகளும், தூரமும், பகைமையும் உண்டாகும். நமது பரஸ்பர உறவுகள் சீர்கெடும். நினைவிற் கொள்ளுங்கள்! உறவுகள் சீர்கெடும்போது, நாம் திருக்குர்ஆனின் கட்டளையை மீறியதால் அவ்வாறு நிகழுமே தவிர திருக்குர்ஆனின் கட்டளையின்படி அமல் செய்வதால் அவ்வாறு உறவுகள் சீர்கெடாது.

சிறிய தொகைக்கான கொடுக்கல் வாங்கல்; , இவ்வளவு சிறிய தொகைக்காக எப்படி எழுதுவது? என்று சிலர் இவ்வாறு எழுதுகின்றனர்; அல்லது கூறுகின்றனர். இதனை எப்படி எழுதுவது? மிக நெருங்கிய உறவாக இருக்கும்போது இவ்வளவு சிறிய தொகைக்காக எழுதுவற்கு எங்களுக்கு வெட்கமாக இருக்கின்றது; என்று கூறுகின்றனர். அல்லது ஒரு பொருளை பயன்பாட்டிற்காக வாங்கும்போது அது தொடர்பாக எழுதிக் கொள்வதற்கும் வெட்கப்படுகின்றனர். உதாரணமாக, சில நேரங்களில் திருமணங்கள் அல்லது விசேஷங்களின் போது ஒருவர் மற்றவரின் பொருட்கள் தற்காலிக பயன்பாட்டிற்காக வாங்கப்படுகின்றன. அவையும் இதே வட்டத்தின் கீழ்தான் வருகின்றன. அவற்றையும் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், இவற்றிலும் சிலமுறை தப்பெண்ணங்கள் உருவாகி விடுகின்றன. பிற்காலத்தில் ஏற்படும் தப்பெண்ணங்களிலிருந்து தப்பிப்பதற்கு சிறிய அளவில் அதனை எழுத்து வடிவில் கொண்டு வருவதே மிகச்சிறந்த வழிமுறையாகும்.

அல்லாஹ்வின் கட்டளை என்னவென்றால், கொடுக்கல் வாங்கல் சிறியதோ அல்லது பெரியதோ, சண்டைகளைத் தவிர்க்க விரும்பினால் அதை எழுதிக் கொள்ளுங்கள். திருக்குர்ஆன் கூறுகிறது: 'அது (கடன் தொகை) சிறியதோ அல்லது பெரியதோ, அதன் காலக் கெடுவுடன் அதாவது எதுவரை ஒப்பந்தம் என்பதையும், ஒப்பந்தத்தின் விளக்கத்தையும் எழுதிக் கொள்ளுங்கள். இதனை எழுதுவதிலிருந்தும் சலிப்படையக் கூடாது. அல்லது அதனை ஒரு சாதாரண விஷயமாகக் கருதக் கூடாது.

'சலிப்படைய வேண்டாம்' என்று கூறுவதன் நோக்கம் என்னவென்றால், ஷைத்தான் எந்த நேரத்திலும் உங்கள் மனதில் தப்பெண்ணங்களை விதைக்கக் கூடும். வெளிப்படையில் நீங்கள் பெருந்தன்மையைக் காட்டுவதாகத் தோன்றலாம். ஆனால், நீங்கள் செய்த இந்த பெருந்தன்மையான செயலானது உங்களை ஒருநேரத்தில் எப்படிப்பட்ட நிலையில் கொண்டுபோய் நிறுத்தக் கூடும் என்றால், அப்போது பெருந்தன்மை என்பது ஒரு பக்கம் இருக்கட்டும்; நீங்கள் குறைந்த அளவிலான ஒழுக்கத்தைக் கூட வெளிப்படுத்த மாட்டீர்கள். பொதுவாக இப்படித்தான் நடக்கின்றன. கற்பனையில் நாம் இந்த விஷயங்களை கூறவில்லை. மாறாக, இப்படிப்பட்ட விவகாரங்கள் நம்முன் வருகின்றன. இத்தகைய சம்பவங்கள் கொடுக்கல் வாங்கலில், பொது விவகாரங்களில் ஜமாஅத்தில் அல்லது நீதிமன்றங்களில் வழக்குகளில் அதிகம் நடக்கின்றன. ஒரு காலத்தில் ஒன்றாக அமர்ந்து உணவு அருந்தியவர்கள், மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்கள், பின்னாட்களில் ஒருவருக்கொருவர் உயிருக்கே பகைவர்களாக மாறிவிடுகின்றனர். நீதிமன்றங்களில் ஒருவருக்கொருவர் எதிராகப் பொய் சாட்சிகளைத் தேடுகிறார்கள். இவை அனைத்தும் அல்லாஹ்வின் கட்டளைகளைப் பின்பற்றாததன் விளைவே ஆகும்.

அல்லாஹ் தனது படைப்பினங்களின் தன்மையை அறிந்தவன் ஆவான். எனவே, அத்தகைய கொடுக்கல் வாங்கலை எழுதும் முறையையும் அவன் விளக்கியுள்ளான். எவ்வாறு எழுத வேண்டும்? யார் எழுதச் சொல்ல வேண்டும்? யார் சொல்லச் சொல்ல எழுத வேண்டும்? என்பவற்றையும் கூறிவிட்டான்.

அல்லாஹ் கூறுகிறான்: 'எவர் மீது கடன் (திரும்பச் செலுத்த வேண்டிய கடமை) இருக்கிறதோ, அவரே (விபரங்களைச்) சொல்ல வேண்டும்; அவர் தனது ரப்பான அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளட்டும்; அதில் எதையும் குறைத்து விட வேண்டாம்.'

அதாவது, கடன் வாங்கியவர், தான் இவ்வளவு தொகை வாங்கியுள்ளேன் என்பதையும், அதைத் திருப்பிச் செலுத்துவதற்கான நிபந்தனைகளையும் அவரே விளக்கிக் கூற வேண்டும். 'நான் இவ்வளவு கடன் வாங்கியுள்ளேன்; இத்தனை தவணைகளில் திருப்பித் தருவேன்; இவ்வளவு காலத்திற்குள் தருவேன்' என்று அவர் தெளிவாகக் கூற வேண்டும். இதன் மூலம், கடன் கொடுத்தவர் தன் மீது அநீதி இழைத்துவிட்டதாகவோ அல்லது வலுக்கட்டாயமாக எதையும் செய்யச் சொல்வதாகவோ பின்னாளில் கூற முடியாது. சில வார்த்தைகள் ஒப்பந்தத்தில் மாற்றி,மாற்றி எழுதப்பட்டுள்ளன. அவை என்னைப் பாதித்துள்ளன என்று ஒருவர் கூறக் கூடும்.

அதிலிருந்து தப்பிக்க, அல்லாஹ் கூறியுள்ளான்: கடன் வாங்குபவரே விதிமுறைகளை எழுத வேண்டும். இந்த விஷயமும் இஸ்லாமிய சமூகத்தில் மட்டுமே தென்படும். மேலும் இஸ்லாத்தின் போதனைகளில் மட்டுமே தென்படும். அடுத்து கடன் கொடுப்பவருக்கு நன்மை உண்டு எனக் கூறப்பட்டுள்ளது. அவர் கால அவகாசத்துடன் கூடிய எளிய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் அவருக்கு அதற்கான நற்கூலி கிடைக்கும் என்று இஸ்லாம் கூறுகிறது.

(ஜுமுஆ பேருரை, ஆகஸ்ட், 13, 2004)

தமிழாக்கம்

A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

# ஜுமுஆ பேருரை

**ஏகத்துவத்தின் மீதான துடிப்பின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள் மற்றும் மத்திய கிழக்குப் போரின் நிலைமைகள் தொடர்பாக துஆவிற்கான அறிவுரை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 27 மார்ச் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **அமான்** மாதம் **27 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۞ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு தொடர்பாக ஏகத்துவத்தைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டு வந்தது. மக்கா வெற்றியின் போது சிலைகளை அகற்றியது குறித்த விவரங்கள் முந்தைய குத்பாக்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. நீங்கள் எந்த சிலைகளை வணங்குகின்றீர்களோ அவற்றின் நிலை இதுவாகும் என்று அல்லாஹ்வின் ஏகத்துவத்திற்கான அறிவிப்பிற்காகவே அன்னார் (ஸல்) இவை அனைத்தையும் செய்தார்கள்.

ஆக, நாம் கண்டோம்; மக்காவைச் சுற்றியிருந்த இணைவைப்பாளர்களுடைய மனாத், உஸ்ஸா, ஸுவாஃ போன்ற பெரும் பெரும் சிலைகள் அனைத்தும் தகர்க்கப்பட்டன. இது தொடர்பாக தாயிஃப் வாசிகளின் லாத் என்ற சிலையைப் பற்றி ஓர் அறிவிப்பு இவ்வாறு கிடைக்கின்றது:

தாயிஃப் வாசிகள் தங்கள் 'லாத்' என்ற சிலையை 'ரப்பஃ அதாவது தேவி என்று அழைத்து வந்தனர். அந்தச் சிலையை மூன்று ஆண்டுகள் வரை உடைக்க வேண்டாம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது. ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் ஏகத்துவத்திற்கான தன்மான உணர்வு இந்தத் எதிர்ப்பை ஏற்கவில்லை. ஒரு வருடம் வரையாவது அதை உடைக்க வேண்டாம் என்று மீண்டும் தாயிஃப் நகர வாசிகள் வேண்டினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதையும் நிராகரித்துவிட்டார்கள். மக்கள் இஸ்லாத்திற்குள் நுழையும் வரையிலும், அறிவீனமான நபர்களும், பெண்களும் இஸ்லாத்தை விட்டு விலகி விடாமல் இருப்பதற்காகவும், ஒரு மாதம் வரை அதை உடைக்காமல் இருப்பதற்கு அனுமதி தரும்படி அவர்கள் கேட்டனர். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதற்கும் அனுமதி வழங்கவில்லை. மேலும் அபூ ஸுஃப்யான் மற்றும் ஹஸ்ரத் முஃகைரா பின் ஷுஃபா (ரலி) ஆகியோரை அனுப்பி அந்தச் சிலையைத் தகர்க்கச் செய்து விட்டார்கள்.

, இஸ்லாமிய அரசு நிறுவப்பட்ட பிறகு எந்தச் சூழலிலும் அந்தச் சிலைகள் எஞ்சியிருப்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏகத்துவத்தின் மீதான தன்மான உணர்வு சகித்துக் கொள்ளவில்லை.

(அஸ்ஸீரத் அல்-ஹல்பிய்யா, பாகம் 3, பக்கம் 304 முதல் 305 வரை, தாருல் குதுபில்-இல்மிய்யா, பெய்ரூத்)

அபுல் ஹய்யாஜ் அஸதி அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் (ரலி) என்னிடம் கூறினார்கள்: எந்த சிலையையும் (உடைக்காமல்) விட்டுவிடாதீர்; மாறாக அதனை அழித்துவிடுவீராக; மேலும், உயர்ந்திருக்கும் எந்தக் கப்ரையும் (மண்ணோடு) சமமாக்காமல் விட்டுவிடாதீர் என்று கூறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்தப் பணிக்காக என்னை அனுப்பினார்களோ, அதே பணிக்காக நான் உன்னை அனுப்பட்டுமா என்ன?.

(ஸஹீஹ் முஸ்லிம் (மொழிபெயர்ப்பு), பாகம் 4, பக்கம் 133, ஜனாஸா பாடப்புத்தகம், அத்தியாயம்: கல்லறையைச் சமப்படுத்துதல், ஹதீஸ்: 1597, நூர் அறக்கட்டளை ரப்வா)

ஏன்? ஏனெனில், இவை ஏகத்துவத்திற்கு எதிரான விஷயங்களாகும், மேலும் இஸ்லாமிய அரசாங்கத்தில் எவ்விதத்திலும் சகித்துக்கொள்ள முடியாது.

ஆனால், பரிதாபத்திற்குரிய விஷயம் என்னவென்றால், இன்று முஸ்லிம்களில் பெரும் பகுதியினர் கல்லறைகளை வணங்குவதிலும், அங்கு ஸஜ்தா செய்வதிலும், அல்லாஹ்விடம் வேண்டுவதற்குப் பகரமாக அந்தக் கல்லறைகளில் அடக்கம் செய்யப்பட்ட சான்றோர்களிடம் வேண்டுகின்றனர். மேலும் அதில் மிகவும் வரம்பு மீறிச் செல்கின்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏகத்துவத்தை நிலைநாட்டும் பொருட்டு மக்காவைப் போன்ற ஒரு வலிமையான சமுதாயத்தை எதிர்கொண்டார்கள். மேலும், இறுதியில் கஃபாவிலிருந்த முந்நூற்று அறுபது சிலைகளிலிருந்து அதைத் தூய்மைப்படுத்தினார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால், அத்துடன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களின் இதயங்களிலும் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக அன்னார் (ஸல்) ஒரு மகத்தான, அருளுக்குரிய ஜிஹாதை செய்தார்கள். மேலும், தமது பரிசுத்த ஆற்றலின் மூலமாக ஏகத்துவத்தை நேசிக்கும் ஒரு ஜமாஅத்தை நிறுவினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஸஹாபிகளுக்கு எந்த அளவிற்கு நுணுக்கமான மற்றும் சிறந்த முறையில் மார்க்கப் பயிற்சி அளித்தார்கள் என்றால், இணைவைப்பின் சிறிய நிழல் கூட எவருடைய சிந்தனையிலும் உருவாகவில்லை. மேலும், அதற்காகவே ஸஹாபிகள் தம்மை புகழ்வதில் வரம்பு மீறுவதிலிருந்தும் அவர்களை அன்னார் (ஸல்) தடுத்தார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சொற்பொழிவு மேடையில் நின்று இவ்வாறு கூறியதை அவர்கள் செவிமடுத்தார்கள்:

அதாவது, கிறிஸ்தவர்கள் மர்யமின் மகனை புகழ்வதில் வரம்பு மீறியது போல், நீங்கள் என்னைப் புகழ்வதில் வரம்பு மீறாதீர்கள்; நானோ அவனது அடியான் மட்டுமே ஆவேன்; நான் அல்லாஹ்வின் அடியான் மட்டுமே ஆவான்; எனவே, என்னை அல்லாஹ்வின் அடியான் என்றும் அவனது தூதர் என்றும் கூறுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி, கிதாப்: அஹாதீஸுல் அன்பியா, பாபு கவ்லில்லாஹி தஆலா: வத்குர் ஃபில் கிதாபி மர்யம், ஹதீஸ் எண்: 3445)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அறிவிக்கின்றார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஒரு கூட்டத்தில் சென்று கொண்டிருக்கும்போது அன்னாரைச் சந்தித்தார்கள். அன்னார் (ரலி) தமது தந்தையின் மீது சத்தியம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'கேளுங்கள்! உங்கள் முன்னோர்களின் மீது நீங்கள் சத்தியம் செய்வதை அல்லாஹ் உங்களுக்குத் தடை செய்கிறான்; எவரேனும் சத்தியம் செய்வதாக இருந்தால் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யட்டும்! அல்லது மௌனமாக இருக்கட்டும்!' (ஸஹீஹ் புகாரி, கிதாப் அல்-ஈமான் வந் நுதுார், பாபு லா தஹ்லிஃபூ பி ஆபாஇக்கும், ஹதீஸ்: 6646)

அல்லாஹ்வின் ஏகத்துவத்திற்கு எதிரில் மிகச் சிறிய ஒன்றை வைப்பதைக் கூட அன்னார் சகித்துக்கொள்ளவில்லை.

ஏகத்துவத்தின் கலிமாவை ஓதக் கூடியவர்களின் அந்தஸ்தைப் பற்றி ஓர் அறிவிப்பில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: உபைதுல்லாஹ் பின் அதீ பின் கியார் கூறினார்கள்: ஹஸ்ரத் மிக்தாத் பின் அம்ர் கிந்தி (ரலி) அவர்கள் பனூ ஸுஹ்ராவின் கூட்டாளியாக இருந்தனர், இவர்கள் பத்ருப் போரில் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் பங்கேற்றவர்களில் ஒருவராக இருந்தார்கள். அவர்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நிராகரிப்பாளர்களில் ஒருவருடன் எனக்குப் போர் புரிய நேரிட்டு, நாங்கள் இருவரும் சண்டையிடும்போது, அவர் தனது வாளால் எனது இரண்டு கைகளில் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தி அதனை வெட்டி வீழ்த்திவிட்டு, பின்னர் என்னிடமிருந்து ஒரு மரத்தின் பின்னால் மறைந்து கொண்டு, 'நான் அல்லாஹ்விற்காக முஸ்லிமாகிவிட்டேன்' என்று கூறினால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே ! அவர் இந்தக் கலிமாவைக் கூறிவிட்டால் அதன் பிறகு இனி நான் அவரைக் கொன்று விடலாமா?' என்று கேட்டார்கள்.

அதற்கு, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் 'அவரைக் கொல்லக் கூடாது. ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவர் என் கையை வெட்டி விட்டார்; மேலும் அதனை வெட்டிய பிறகுதான் لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று கூறினார். அதற்கு, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (இல்லை) அவரைக் கொல்லக் கூடாது; ஏனெனில் நீர் அவரைக் கொன்று விட்டால், பின்னர் நீர் அவரைக் கொல்வதற்கு முன் உமக்கு எந்த அந்தஸ்து கிடைத்திருந்ததோ அந்த அந்தஸ்திற்கு அவர் சென்று விடுவார்; மேலும், நீரோ அவர் அந்தக் கலிமாவைக் கூறுவதற்கு முன் எந்த நிலையில் இருந்தாரோ அந்த நிலைக்கு நீர் சென்றுவிடுவீர். (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸி, பாடம் 12, ஹதீஸ் எண்: 4019)

ஒருவர் எவ்வளவுதான் மூத்த ஸஹாபியாக இருந்தாலும், அவர் இத்தகைய செயலை செய்தால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதனை மிகவும் தீயதாகக் கருதினார்கள். ஆனால் இன்றைய ஆலிம்களைப் பாருங்கள்!

பாகிஸ்தானில் அஹ்மதிகள் கலிமா ஓதிய பிறகும் எந்த அளவு அநீதிக்கு இலக்காக்கப்படுகின்றனர் என்றால், அதற்கு எல்லையே இல்லை. இந்த அநீதி இழைப்பவர்களைப் பற்றிய தீர்ப்பை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இந்த அறிவிப்பில் வழங்கிவிட்டார்கள். எப்படியிருப்பினும், இப்போது தீவிரவாத முல்லாக்களின் பின்னால் செல்பவர்கள் இதைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

அடுத்து, இது தொடர்பாக மற்றோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களை ஒரு போருக்கு அனுப்பி வைத்தார்கள். நாங்கள் அதிகாலை நேரத்தில் ஜுஹைனாவின் 'ஹுருகாத் என்ற இடத்தைச் சென்றடைந்தோம். ஹுருகாத் ஜுஹைனா கோத்திரத்தின் பகுதியில் உள்ள ஒரு கிராமத்தின் பெயராகும். அங்கே நான் ஒரு நபரைப் பிடித்தேன். அவர் لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று கூறினார். இருந்தபோதிலும் நான் அவரை எனது ஈட்டியால் குத்திக் கொன்றேன். இது குறித்து என் மனதில் ஒரு நெருடல் ஏற்பட்டது. ஏனெனில், لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ கூறியிருந்தார். அவ்வாறிருந்தும் நான் அவரை கொன்று விட்டேன்; எனவே நான் இதனைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் குறிப்பிட்டேன். அப்போது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அவர் لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்று கூறிய பிறகும் நீர் அவரைக் கொன்றுவிட்டீரா?. அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவர் ஆயுதத்திற்குப் பயந்துதான் கலிமா கூறியிருந்தார் என்று நான் கூறினேன். அப்போது, அவர் இதயத்திலிருந்து சொன்னாரா? இல்லையா? என்பதை அறிய நீர் அவர் இதயத்தைப் பிளந்து பார்த்தீரா?' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்தக் கூற்றை எனக்கு முன்னால் திரும்பத் திரும்ப கூறிக் கொண்டிருந்தார்கள். எந்த அளவிற்கு என்றால், அந்தோ நான் இந்த நாள் அன்று இஸ்லாத்தை தழுவியிருக்கக் கூடாதா? என்று நான் விருப்பம் கொண்டேன்.

(ஸஹீஹ் முஸ்லிம் (மொழிபெயர்ப்பு), பாகம் 1, பக்கம் 88-89, கிதாபுல் ஈமான், பாடம்: காஃபிர் லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறிய பிறகு அவனைக் கொல்வது ஹராம், ஹதீஸ் எண்: 132, நூர் ஃபவுண்டேஷன் ரப்வா)

அடுத்து, ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒரு நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! சொர்க்கத்தையும், நரகத்தையும் உறுதிப்படுத்தும் இரண்டு விஷயங்கள் எவை?' என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்: கூறினார்கள்: எந்த நபர் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்காத நிலையில் மரணிப்பாரோ அவர் சொர்க்கத்தில் நுழைவார்; மேலும், எந்த நபர் அல்லாஹ்வுக்கு எதையேனும் இணை வைத்த நிலையில் மரணிப்பாரோ அவர் நரகத்தில் நுழைவார்.

(ஸஹீஹ் முஸ்லிம் (மொழிபெயர்ப்பு), பாகம் 1, பக்கம் 84-85, கிதாபுல் ஈமான், பாடம்: அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்காமல் மரணிப்பவர் சொர்க்கத்தில் நுழைவார்... ஹதீஸ் எண்: 127)

மஹ்மூத் பின் லபீத் (ரலி) அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களைப் பற்றி நான் அதிகம் பயப்படுவது 'சிறிய ஷிர்க்கைப் பற்றித்தான்'. அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! சிறிய ஷிர்க் என்றால் என்ன?' என்று ஸஹாபிகள் கேட்டனர். அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், பகட்டு என்று கூறினார்கள். மறுமை நாளில் மக்களின் செயல்களுக்குப் பலன் அளிக்கப்படும்போது, அல்லாஹ் அவர்களிடம் கூறுவான்: 'உலகில் நீங்கள் யாருக்கு காட்டுவதற்காக அமல்கள் செய்தீர்களோ, அதாவது உங்களது பகட்டான செயல்கள் உள்ளனவே! அவற்றை எடுத்துக் கொண்டு நீங்கள் அவர்களிடமே செல்லுங்கள்; மேலும் அவர்களிடம் உங்களுக்கு ஏதேனும் பலன் கிடைக்கிறதா? என்று பாருங்கள்'.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பல், பாகம் 7, பக்கம் 799, ஹதீஸ்: 24030, ஆலமுல் குதுப் 1998)

எனவே, மக்களிடமிருந்து ஏதாவது பயனடைவதற்காக பகட்டான வெளிப்பாடும், முகஸ்துதி செய்வதும் அல்லாஹ்வுக்கு எதிரில் ஒன்றை இணையாக்குவது போன்றதாகும். மேலும் இது ஒரு ஷிர்க் ஆகும், இது அல்லாஹ்வுக்கு மிகவும் விரும்பத்தகாத ஒன்றாகும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அறிவிக்கின்றார்கள்:

اَلَّذِيْنَ اٰمَنُوْا وَلَمْ يَلْبِسُوْٓا اِيْمَانَهُمْ بِظُلْمٍ

என்ற இந்த வசனம் இறங்கியது. (6:83) பொருள்:

'எவர்கள் ஈமான் கொண்டு, பிறகு தங்கள் ஈமானுடன் அநீதியைக் கலக்கவில்லையோ...,

அப்போது, நம்மில் அநீதி இழைக்காதவர் யார்? நம்மிடமோ அநீதிகள் ஏராளமாக உள்ளன. நமக்குத் தெரியாமலேயே நாம் அநீதி இழைத்துக் கொண்டு செல்கிறோம். அதற்கு, அல்லாஹ்

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

اِنَّ الشِّرْكَ لَظُلْمٌ عَظِيْمٌ

என்ற இந்த வசனத்தை இறக்கினான்.

பொருள்: நிச்சயமாக இணைவைத்தல் மாபெரும் அநீதியாகும்'
(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் ஈமான், ஹதீஸ்: 32)

ஷிர்க் என்பது மாபெரும் அநீதியாகும் என்ற இந்த பதில் பின்னர் அல்லாஹ்விடமிருந்தே வந்து விட்டது. எனவே அல்லாஹ்வைத் தவிர்த்து வேறு எந்தவொரு விஷயத்தையும் சார்ந்திருப்பது ஷிர்க் ஆகும். நம்மிடம் ஷிர்க்கின் அம்சம் ஏதும் இல்லையே? என்று நுணுக்கமாகச் சென்று நம்மைப் பார்க்க வேண்டும். ஏனெனில் இது ஒரு மிகப்பெரும் அநீதியாகும்.

நமால் வெளியிடப்படுள்ள புஹாரியின் விளக்கவுரை இருக்கின்றது. ஹஸ்ரத் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் விரிவுரை எழுதியுள்ளார்கள். அதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

اِنَّ الشِّرْكَ لَظُلْمٌ عَظِيْمٌ

'நிச்சயமாக இணைவைத்தல் மாபெரும் அநீதியாகும்' - அநீதி என்பதன் பொருள் وَضْعُ الشَّيْءِ فِي غَيْرِ مَوْضِعِه ஆகும். அதாவது ஒரு பொருளை அதற்கு பொருத்தமற்ற இடத்தில் வைப்பதாகும். எல்லா வகையான தீய ஒழுக்கமும், ஆகுமற்ற விஷயங்களும் அநீதி என்ற பொருளில் அடங்கும். அடுத்து كُفْرٌ دُوْنَ كُفْرٍ என்ற தலைப்பின் கீழ் இணை வைத்தல் மாபெரும் நிராகரிப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சிறிய தீய ஒழுக்கமும் கூட குஃப்ர் (நிராகரிப்பு) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுதான் இதன் நுட்பமாகும்.

அடுத்து, இதன் பிறகு
ظُلْمٌ دُوْنَ ظُلْمٍ

என்ற தலைப்பின் கீழ், ஷிர்க் எல்லாவற்றையும் விட பெரும் அநீதி என்று குறிப்பிட்டுவிட்டு, அது ஏன் மாபெரும் பாவம் ஆகும்? என்று கூறப்பட்டுள்ளது. ஏனெனில், இதில் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரிய சிறப்பு இறைப் பண்புகள் மற்றவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இறை வணக்கங்கள் அதாவது உண்மையில் அன்பு மற்றும் கீழ்ப்படிதலின் உண்மையான உரிமையாளன் அல்லாஹ் மட்டுமே ஆவான், அவ்வாறிருக்க அதில் மற்றவர்களும் இணையாக்கப்படுகிறார்கள். இறைவனின் அடியானான மனிதன், இறைவனது விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே படைக்கப்பட்டான், ஆனால் மனிதன் தனது நஃப்ஸுடைய அல்லது தன்னைப் போன்ற மனிதனின் அல்லது தன்னை விடக் தாழ்ந்த படைப்புகளின் அடியானாக மாறி எந்த அந்தஸ்தை அடைவதற்காக அவன் படைக்கப்பட்டானோ அந்த அந்தஸ்திலிருந்து அவன் தன்னைத் தானே மிகவும் தாழ்த்திக் கொள்கிறான்.

படைப்பினங்களின் உரிமைகளில் ஆகுமற்ற மாற்றம் செய்வது பெரும் அநீதியாகும்! இதுவும் அநீதியாகும். ஆனால், அல்லாஹ்வின் உரிமைகளில் ஆகுமற்ற மாற்றம் செய்வது அதை விட பெரும் அநீதியாகும்.

அதாவது படைப்பினகளின் உரிமைகளில் மாற்றம் செய்தல் என்பதோ அநீதியே ஆகும். அதே நேரம் அல்லாஹ்விற்குரிய உரிமைகளை சரியாக நிறைவேற்றாமல் இருப்பது இதுவும் அநீதியாகும். இது ஷிர்க்கில் முழுமையாக காணப்படும் அநீதியின் பொருளாகும்.

உண்மையில், ஷிர்க்கானது மனிதனின் உயர்ந்த நோக்கத்தையே அழித்து விடக் கூடியதாகும்.

ஹஸ்ரத் இமாம் புகாரி அவர்கள் இறை வசனங்கள் மற்றும் ஹதீஸ்களின் அடிப்படையில் விளக்கியவாறு, முழுமையான ஈமான் என்பது ஷிர்க்கின் கலப்படத்திலிருந்து முற்றிலும் தூய்மையானதாக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

أُولَٰئِكَ لَهُمُ الْأَمْنُ وَهُمْ مُّهْتَدُوْنَ

(6:83)

எந்த மக்களின் ஈமானில் எவ்வகையான ஷிர்க்கும், இணை வைத்தலும் கலக்கவில்லையோ அத்தகைய மக்களே முழுமையான அமைதி மற்றும் நேர்வழியில் பங்கு பெற்றவர் ஆவர்.
(அல்-அன்ஆம்: 83).

ஒருபுறம் நற்செயல்கள் இடம் பெறாமலும், மறுபுறம் எல்லா வகையிலான அநீதியின் கலப்பும் அதில் இருந்தால் அந்த ஈமான் முழுமையானது அல்ல. ஏனெனில் ஷிர்க்கும், பாவமும், மற்றும் எல்லா வகையான நிராகரிப்பும் ஈமானைப் பலவீனப்படுத்திக் கொண்டே இருக்கும்.
(ஸஹீஹ் புகாரி, பாகம் 1, பக்கம் 79, நஸாரத் இஷாஅத்)

ஆக, இதுவே தவ்ஹீதில் நிலைத்திருப்பதற்கும், ஷிர்க்கிலிருந்து தூய்மையடைவதற்குமான தரமாகும். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு கூறியதாகும்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

அல்லாஹ் என்னிடம் இவ்வாறு கூறினான்:

'ஆதமின் மகன் என்னைப் பொய்ப்பிக்கிறான், அது அவனுக்கு ஆகுமற்றதாகும். அவன் என்னை ஏசிபேசுகிறான், அதுவும் அவனுக்கு ஆகுமற்றதாகும். அவன் என்னைப் பொய்ப்பிப்பது என்பது - 'நான் அவனை ஒருபோதும் மீண்டும் படைக்கமாட்டேன் என்று கூறுவதாகும்; மீண்டும் அதாவது இந்த உலகிற்குப் பிறகு நான் அவனை முதலில் படைத்தது போல மறுமையில் மீண்டும் உயிர்ப்பிப்பதை நிராகரிப்பதாகும்'. ஆக, இது அல்லாஹ்வை பொய்ப்படுத்துவது ஆகும்.

அவன் என்னை ஏசுவது என்பது அவனது இந்தக் கூற்றாகும். அதாவது, 'அல்லாஹ் தனக்கென ஒரு மகனை ஏற்படுத்திக் கொண்டான்' என்று அவன் கூறுவதாகும். உண்மையில் நானோ தேவையற்றவன் ஆவேன்; நான் யாரையும் பெறவுமில்லை; யாராலும் பெறப்படவுமில்லை. எனக்கு நிகர் எவரும் இல்லை.

அவன் யாரையும் பெறவுமில்லை; அவன் யாராலும் பெறப்படவுமில்லை. அவனது பண்புகளில் அவனுக்கு இணை எவரும் இல்லை.
(ஸஹீஹ் புகாரி, கிதாபுத் தஃப்சீர், ஸூரா அல்-இக்லாஸ், ஹதீஸ்: 4975)

இந்த சூராவிற்கு, ஸூரா இக்லாஸிற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

اَللّٰهُ الصَّمَدُ

என்று அல்லாஹ் கூறுகிறான்:

அதாவது, அல்லாஹ் எவரிடத்தும் தேவையற்றவன், அனைவரும் அவனது தேவையுடையவர்கள் ஆவர். அவனுக்கு யாரிடமும் எந்தத் தேவையும் இல்லை.

அன்னார் (அலை) மேலும் கூறுகின்றார்கள்:

இந்த மிகச் சிறிய வாக்கியத்தை அதாவது ஒரு வரியின் அளவு கூட இல்லாத இந்த சிறிய வாக்கியத்தைப் பார்க்க வேண்டும். அனைத்து விதமான இணையிலிருந்தும் வல்ல இறைவன் தூய்மையானவன் என்பதை இந்த சிறிய வாக்கியம் எவ்வளவு நுட்பமாகவும், சிறப்புடனும் எடுத்துரைக்கின்றது! எல்லா வகையான ஷிர்க்கிலிருந்தும் அது தூய்மையாக்கி விட்டது.

அதன் விளக்கம் இவ்வாறாகும். பகுத்தறிவின் அடிப்படையில் ஷிர்க் என்பது நான்கு வகைப்படும். ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணிக்கையிலான இணைவைத்தல். சிலநேரம் அந்தஸ்தில் இணைவைத்தல் நிகழ்கின்றது. ஒருவருடைய அந்தஸ்து உயர்ந்ததாக இருக்கின்றது. மேலும் சிலமுறை வம்சாவளி அடிப்படையில் இணைவைத்தல்; குடும்ப பாரம்பரிய ரீதியில். மேலும், சிலமுறை செயல் மற்றும் தாக்கங்களில் இணைவைத்தல். அதாவது பணியின் அடிப்படையிலும், அதன் விளைவுகளின் அடிப்படையிலும் ஷிர்க் செய்யப்படுகின்றது.

ஆக, இந்த நான்கு வகை ஷிர்க்கிலிருந்தும் இறைவன் தூய்மையானவன் என்பதை இந்த ஸூரா எடுத்துரைக்கின்றது. மேலும் இதனை தெளிவாக்கி

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

விட்டது. அதாவது அவன் தனது எண்ணிக்கையில் ஏகன் ஆவான். இரண்டு அல்லது மூன்று அல்ல. மேலும் அவன் அஸ்ஸமது ஆவான். அதாவது தனது அந்தஸ்திலும், தனது கட்டாய இருப்பு நிலை மற்றும் அனைத்தும் தன்னை சார்ந்திருக்கும் நிலை ஆகியவற்றில் தனித்துவமானவன் என்று தெளிவாக விளக்கிவிட்டது.

அதாவது, அவனது அந்தஸ்திலும், அவனது இருப்பின் அவசியத்திலும், அனைத்தும் அவனைச் சார்ந்திருக்கின்றன என்பதிலும் அவன் முற்றிலும் தூயவன் ஆவான்.

அவன் ஏகன் ஆவான்; அவனைத் தவிர மற்ற அனைத்துப் பொருட்களும் குறுகிய கால அளவு இருப்பைக் கொண்டவையும், தமது இருப்பிலேயே அழியக் கூடியவையும் ஆகும்.

அவை தமது இருப்பில் முடிந்து விடக் கூடியவை ஆகும். அழியக் கூடியவை ஆகும். ஆனால், அவன் எப்போதும் நிலைத்திருக்கக் கூடியவன் ஆவான். அவன் நிரந்தரமாக இருக்கின்றான்; மேலும் எப்போதும் இருப்பான். மற்ற அனைத்தும் எப்போதும் அவனது தேவையைக் கொண்டவையாக இருக்கின்றன. உலகின் அழியக் கூடிய அனைத்துப் பொருட்களும் அவனையே சார்ந்திருக்கின்றன. அவன் لَمْ يَلِدْ ஆவான். அதாவது மகன் இருக்கும் நிலையில் அவனுக்கு இணையாகி விடுவதற்கு அவனுக்கு எந்த மகனும் இல்லை. மேலும் அவன் لَمْ يُوْلَدْ ஆவான். அதாவது தந்தை இருக்கும் காரணத்தால் அவனுக்கு இணையாகி விடுவதற்கு அவன் யாராலும் பெறப்படவுமில்லை.

மேலும் அவன். لَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا ஆவான்.

அதாவது செயல் ரீதியில் அவனுக்கு இணையாகுவதற்கு அவனது பணிகளில் அவனுக்கு இணையாகக் கூடியவர் எவருமில்லை.

ஆக, இந்த வகையில், வல்ல இறைவன் நான்கு வகையான ஷிர்க்கிலிருந்தும் தூயவனும், பரிசுத்தமானவனும் ஆவான் என்பதை அவன் வெளிப்படுத்தி விட்டான்.

(பராஹீனே அஹ்மதியா, பாகம் 4, ரூஹானி கஸாயின், பாகம் 1, பக்கம் 518)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு மனிதரை ஒரு படைப்பிரிவுக்குத் தலைவராக நியமித்து அனுப்பினார்கள். அவர் தம் தோழர்களுக்குத் தொழுகை நடத்தும்போது, திலாவத் செய்வார்; மேலும் قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ஓதி முடிப்பார். அதாவது இறுதியில் ஸூரா இக்லாஸ் ஓதுவார்.

அந்த மக்கள் திரும்பி வந்தபோது, இது குறித்து நபி (ஸல்) அவர்களிடம் அந்த மக்கள் குறிப்பிட்டனர். அதற்கு, அவர் ஏன் அவ்வாறு செய்கிறார்? என அவரிடம் கேளுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவரிடம் கேட்டபோது அவர், 'இது ரஹ்மானின் பண்புகளைக் கொண்டுள்ளது; எனவே நான் இதை ஓத விரும்புகிறேன்' என்று கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் அவரை நேசிக்கிறான் என்று அவரிடம் கூறுங்கள்' எனக் கூறினார்கள். அல்லாஹ்வின் ஏகத்துவத்திற்கான அறிவிப்பை நீங்கள் செய்யும்போது, பின்னர் அல்லாஹ்வும் உங்களை நேசிக்கின்றான்.

(ஸஹீஹ் புகாரி, கிதாப் அத்தவ்ஹீத், பாடம்: 7375)

ஸஹாபிகளும் இறைவனின் மீதான நேசத்தாலும், அவனது ஏகத்துவத்தின் அன்பின் ஞானத்தாலும் நிரம்பியிருந்தார்கள் என்பதற்கு ஏராளமான உதாரணங்கள் கிடைக்கின்றன.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்ஸாரிகளில் ஒருவர் குபா மஸ்ஜிதில் அவர்களுக்கு இமாமத் செய்து வந்தார். அவர் அவர்களுக்காக தொழுகையில் ஏதேனும் ஒரு சூராவை ஓதும்போதெல்லாம்,

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ

என்ற சூராவைக் கொண்டு ஆரம்பிப்பார். அதை முடித்த பின்னரே மற்ற சூராவை ஓதுவார். மேலும் அவர் ஒவ்வொரு ரக்அத்திலும் இதையே செய்து வந்தார். முந்தைய சம்பவம் ஒரு போருக்காக அனுப்பப்பட்ட குழுவில் நிகழ்ந்ததாக இருந்தது.

இந்த சம்பவமோ ஒரு பகுதியில் இமாமாக இருந்தவர் இவ்வாறு செய்து வந்தார். எனவே அவருடன் இருந்தவர்கள் அவரிடம் கேட்டனர். 'நீர் இந்தச் சூராவை ஓதுகிறீர், பிறகு இது மட்டும் போதாது என்று நீர் கருதி மற்றொரு சூராவையும் ஓதுகிறீர். ஒன்று நீர் அந்தச் சூராவை மட்டும் ஓத வேண்டும்; அல்லது இதை விட்டுவிட்டு வேறொரு சூராவை மட்டும் ஓத வேண்டும் என்று அவரிடம் கூறினர். அதற்கு அவர் கூறினார்:

'நான் இதை கைவிடக் கூடியவன் அல்ல. நான் அதனை ஓதி இமாமத் நடத்துவதை நீங்கள் விரும்பினால் நான் செய்கிறேன்; அந்த சூராவை ஓதுவதை நீங்கள் விரும்பவில்லையென்றால் பின்னர் நான் உங்களை விட்டு விலகிக் கொள்கிறேன். அதாவது நான் உங்களுக்கு இமாமத் செய்வதிலிருந்து விலகிக் கொள்கிறேன்'.

தங்களில் அனைவரையும் விட அவர் சிறந்தவர் ஆவார் என்று அவர்கள் கருதியிருந்தனர். எனவே அவரைத் தவிர வேறு எவரும் தொழுகை நடத்துவதை அவர்கள் விரும்பவில்லை.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த மக்களிடம் வருகை தந்தபோது, இன்ன நபர் இவ்வாறு ஓதுகின்றார்; சூரா இக்லாஸை ஒவ்வொரு ரக்அத்திலும் ஓதுகின்றார்; ஒவ்வொரு சூராவிற்கு முன்பும் ஓதுகின்றார் என்று அவர்கள் அன்னாரிடம் இந்த விஷயத்தைக் கூறினர்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இன்ன நபரே! உமது தோழர்கள் உம்மிடம் எந்த விஷயத்தை செய்யும்படி கூறுகின்றனரோ அதனைச் செய்யவிடாமல் உம்மைத் தடுப்பது எது? ஒவ்வொரு ரக்அத்திலும் இந்தச் சூராவை ஓத உம்மைத் தூண்டுவது எது?' என்று கேட்டார்கள். அதற்கு, 'இறைத்தூதர் (ஸல்) அவர்களே! நான் இந்தச் சூராவை நேசிக்கிறேன்' என்றார். அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், 'நிச்சயமாக அதன் மீதான உமது அன்பு உம்மைச் சுவர்க்கத்தில் சேர்க்கும் என்று கூறினார்கள்.

(ஜாமிவுத் திர்மிதி, ஹதீஸ் எண் 2901)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றல் மற்றும் தர்பிய்த்தானது ஸஹாபிகளுக்கும் ஏகத்துவத்திற்கான வழியை காட்டக் கூடிய ஒரு மினாராவாக ஆகிவிட்டது.

புஹாரியின் ஓர் அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்தச் சூராவை ஸூலுஸூல் குர்ஆன் அதாவது திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதி என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஸஹீஹ் புஹாரி, அறிவிப்பு எண்: 5013)

இதன் விளக்கவுரையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

இந்தச் சூரா திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பங்கு' என்பதன் பொருள், இது திருக்குர்ஆனின் ஒட்டுமொத்த அளவில் மூன்றில் ஒரு பங்கு என்பதன்று; மாறாக, இதன் கருத்து சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பதாகும். திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களைப் படிப்பதன் மூலம், இறுதிக்காலத்தில் இரண்டு பெரிய குழப்பங்கள் உருவாகும் என்று தெரிகிறது. ஒன்று, தஜ்ஜாலிய குழப்பம், மற்றொன்று யஃஜூஜ் மஃஜூஜ் குழப்பமாகும். இந்த இரண்டு குழப்பங்களும் ஒன்றன்பின் ஒன்றாக இஸ்லாத்தின் மீது தாக்குதல் நடத்தும்.

ஒரு குழப்பம் ஏக இறைவனுக்குப் பகரமாக மூன்று கடவுள்கள் என்ற கொள்கையைக் கொண்டதாக இருக்கும். அதாவது பிதா, சுதன், பரிசுத்த ஆவி என்ற கொள்கை,



மற்றொன்று இறை மறுப்பைக் கொண்டதாகும். புனித திருக்குர்ஆன் இந்த இரண்டு தவறான கொள்கைகளையும் மறுத்து, சரியான கொள்கையை விளக்கியுள்ளது.

திருக்குர்ஆன் பிதா இறைவனின் விளக்கத்தால் நிறைந்துள்ளது. மேலும் இதே போன்று பிதா ரப்பாக இருப்பதையும், மற்றும் ஏகனாக இருப்பதையும் ஆமோதிக்கின்றது. அதாவது ஏக இறைவனைப் பற்றிய விளக்கத்தை கொடுக்கிறது; மேலும் அவன் ஒருவன் ஆவான் என்று கூறுகிறது. மேலும் இதனையே திருக்குர்ஆன் ஆதரிக்கின்றது.மேலும் இறைன் மூவர் ஆவர்; அதாவது பிதா இறைவன்; சுதன் இறைவன்; பரிசுத்த ஆவி இறைவன் என்ற கோட்பாட்டை முற்றிலும் மறுதலிக்கின்றது. மேலும் இரண்டு கடவுளர்கள் உள்ளனர் என்ற இந்தக் கருத்தை அல்லாஹ் நிராகரிக்கின்றான். ஆக, ஒருவகையில் திருக்குர்ஆன் பிதா எனும் இறைவனின் இறைத் தன்மையை நிறுவுகின்றது. மேலும் சுதன், பரிசுத்த ஆவியின் இறைக் கோட்பாட்டை மறுக்கின்றது. எனவே, பிதா இறைக் கோட்பாட்டின் ஆதரவு என்பது திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியாகும். எனவே, திருக்குர்ஆனின் அடிப்படை நோக்கமான 'இறைவன் ஒருவனே' என்பதை இந்த சூரா நிலைநாட்டுவதால், இது திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியாகும்.

உண்மையில் திருக்குர்ஆனின் பணி ஏகத்துவத்தை நிறுவுவதும், தவறான கொள்கைகளை அழிப்பதுமே ஆகும். எனவே இந்தச் சூரா மிகச் சுருக்கமான மறுப்பு வார்த்தைகளுடன் சுருக்கமான அந்த கருத்தை நிறைவேற்றிவிட்டது. அதன் மூலம் தவறான கொள்கைகள் பொய்ப்படுத்தப்படுகின்றன. பொய் நிரூபணமாகின்றது. மேலும், ஏகத்துவத்தின் உண்மைத்துவத்தை எடுத்துரைத்து விட்டது. எனவே இந்த சூரா திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியாகும். இன்னும் கூறப்போனால், முழு திருக்குர்ஆனிற்கும் சமமாகி விட்டது. எனவே, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் இந்தச் சூராவை 'மூன்றில் ஒரு பகுதி' எனக் குறிப்பிட்டது மிகைப்படுத்துதல் அன்று; மாறாக அதன் கருத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டிருந்ததாலே ஆகும். (தஃப்ஸீர் கபீர், பாகம் 15, பக்கம் 372-373, புதிய பதிப்பு)

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன (13:29)

A. Khaleel Ahmad ( Melapalayam)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

'உறுதியான ஏகத்துவத்தை நபியின் மூலமாக மட்டுமே பெற முடியும் என்பதை நிச்சயமாக அறிந்து கொள்ளுங்கள். எமது நபி (ஸல்) அவர்கள் அரேபியாவின் நாத்திகர்களுக்கும், தீயவர்களுக்கும் ஆயிரக்கணக்கான விண்ணின் அடையாளங்களைக் காட்டி, அவர்களை இறைவனின் இருப்பை ஏற்கும்படி செய்தார்கள். இன்று வரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மையாக மற்றும் முழுமையாக பின்பற்றுபவர்கள், அத்தகைய அடையாளங்களை நாத்திகர்களுக்கு முன்னால் சமர்ப்பிக்கின்றனர். இறைவனின் உயிருள்ள வல்லமைகளை மனிதன் நேரில் காணாதவரை, அவனது இதயத்திலிருந்து ஷைத்தான் வெளியேறவும் மாட்டான்; அவனுக்குள் உண்மையான ஏகத்துவமும் நுழைவதில்லை. மேலும் உறுதியான முறையில் இறைவனின் இருப்பை ஏற்றுக் கொண்டவனாகவும் ஆக முடியாது. மேலும் இந்த தூய மற்றும் முழுமையான ஏகத்துவம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மூலமாக மட்டுமே கிடைக்கிறது.'(ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயின், பாகம் 22, பக்கம் 12)

இக்காலத்தில் ஏக இறைவனை நம்புபவர்கள் கூட செயல் ரீதியாக ஏகத்துவத்திலிருந்து தமது கண்களை விலக்கிக் கொண்டு விட்டனர். நாங்கள் இறைவன் ஒருவனே என்று நம்புகிறோம் ; அவன் ஏகன் ஆவான் என்று நாங்கள் நம்புகிறோம் என இன்று அவர்கள் வெளிப்படையில் கூறக் கூடியவர்கள் ஆவர்; நாங்கள் அல்லாஹ்வை ஒருவன் என்று ஏற்றுக் கொள்கிறோம் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் அமல் அதற்கு எதிராக இருக்கின்றது.

யஃஜூஜ் மஃஜூஜ் மற்றும் தஜ்ஜாலுடைய குழப்பங்கள் தனித்தனியானவை; ஒன்று வெளிப்புறப்பான குழப்பமாகும். முஸ்லிம்களிடத்திலும் கூட உண்மையான தவ்ஹீதைப் பற்றிய புரிதல் இல்லாமல் போய்விட்டது. இத்தகைய நிலைமைகளில்தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பேரன்பர், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியின் வடிவில் தோன்ற இருந்தார். அல்லாஹ்வின் வாக்குறுதிப்படி அவர் தோன்றினார். மேலும் தவ்ஹீதுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஒவ்வொரு தாக்குதலையும் எதிர்கொண்டார்.

எனவே நாம் உண்மையான ஏகத்துவத்தை ஏற்றுக்கொண்டவர்களாக திகழும்போதுதான் உண்மையான பைஅத்தின் உரிமையை நம்மால் நிறைவேற்ற முடியும்.

அன்னார் (அலை) மார்ச் 23 அன்று ஜமாஅத்தை நிறுவினார்கள். நாம் தற்போது கடந்து கொண்டிருக்கும் இந்த மாதம் மார்ச் மாதமாகும். மேலும், மார்ச் 23 அன்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தினத்தை முன்னிட்டு நாம் கூட்டங்களையும் நடத்துகிறோம். நாம் அதனை ஏன் நடத்துகின்றோம் என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேரன்பரை அல்லாஹ் தனது வாக்குறுதிக்கு ஏற்ப தவ்ஹீதை நிலைநாட்டவே அனுப்பியுள்ளான்.

எனவே, அன்னார் (அலை) நிறுவிய ஜமாஅத்தின் பைஅத்தில் நாம் நுழையும்போது, நாமும் தவ்ஹீதில் எப்போதும் நிலைத்திருப்போம் என்றும், தவ்ஹீதிற்கான உண்மையான உரிமையை நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையிலும், நமது குடும்பத்தாரோடும், சமூகத்திலும் நிலைநாட்ட முயற்சிப்போம் என்றும் உறுதிமொழி எடுத்துள்ளோம். அல்லாஹ் முஸ்லிம்கள் அனைவருக்கும், அவன் அனுப்பியவரை ஏற்று தவ்ஹீதை நிலைநாட்டவும், இன்று மிகத் தீவிரமாகத் தாக்கும் யஃஜூஜ் மஃஜூஜ் மற்றும் தஜ்ஜால் குழப்பங்களை உடைக்கவும் நற்பேறு வழங்குவானாக!

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மிஃராஜ் பயணம் குறித்து ஓர் அறிவிப்பு பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இஸ்ராஃ இரவில் நான் இப்ராஹீம் (அலை) அவர்களைச் சந்தித்தேன். அவர்கள் என்னிடம் கூறினார்: 'முஹம்மது (ஸல்) அவர்களே! உங்கள் உம்மத்தினருக்கு எனது ஸலாத்தைத் தெரிவியுங்கள். மேலும் அவர்களிடம் கூறுங்கள்: சொர்க்கத்தின் மண் தூய்மையானது; தண்ணீர் இனிமையானது; மேலும் அது ஒரு பரந்த மைதானம் ஆகும். அதன் செடிகள் 'ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், லாயிலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர்' ஆகியவையாகும்'. (ஜாமிஉத் திர்மிதி, கிதாபுத் தஃவாத், பாடம் 59, ஹதீஸ்: 3462)

எனவே ஒரு நம்பிக்கையாளர் இந்த இறைத் தியானத்தின் ஆழம் வரைச் சென்று முழுமையாக அல்லாஹ்வின் தவ்ஹீதைப் பற்றிய புரிதலைப் பெற முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் வெற்றியாகும். அல்லாஹ் ஏகன் என்றும், தனித்தவன் என்றும் கருத வேண்டும்.

ஒரு ஹதீஸில் இந்த ஹதீஸ் குத்ஸி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்

கூறியதாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் கேட்டேன்:

'ஆதமின் மகனே! நீ என்னிடம் துஆ செய்து, என்னிடம் நம்பிக்கை வைத்தாய்; நான் உன்னை மன்னித்து விட்டேன். இதன் பிறகும், உன்னிடம் இருப்பதை நான் பொருட்படுத்துவதில்லை. அதாவது, உன்னிடத்தில் இன்னும் பலவீனங்களும், குறைகளும் இருக்கலாம், ஆனால், நீ என்னிடம் துஆ செய்து கொண்டிருப்பதால் நான் உன்னை மன்னித்து விடுகிறேன்.

ஆதமின் மகனே! உனது பாவங்கள் வானத்தின் உச்சி வரை உயர்ந்து விட்டாலும், பின்னர் நீ என்னிடம் பாவமன்னிப்புக் கோரினால் உன்னை நான் மன்னிப்பேன். எவ்வளவு பாவங்கள் உள்ளன என்பதைப் பற்றி நான் பொருட்படுத்தமாட்டேன். அல்லாஹ் எஜமானன் ஆவான். அவனால் மன்னிக்க முடியும்.

கூறினார்கள்: ஆதமின் மகனே! நீ பூமி நிரம்ப பாவங்களை எடுத்துக் கொண்டு என்னிடம் வந்து பின்னர் நீ என்னைச் சந்தித்தால், நீ எனக்கு யாரையும் இணையாக்காத நிலையில் என்னைச் சந்தித்தால், பின்னர் நான் பூமி நிரம்ப பாவமன்னிப்பை உனக்கு வழங்குவேன். உனது குற்றங்கள் பூமியின் அளவு இருந்தாலும், பாவங்கள் இருந்தாலும் சரி! நீ எனக்கு இணை வைக்காமலும், என்னைப் பயந்தும், எனது தவ்ஹீதை அறிவித்து அதன்படி செயல்பட முயற்சி செய்தால் பின்னர் நான் உன்னை மன்னித்து விடுவேன்'. பாவமன்னிப்பு வழங்குவேன்.

(ஜாமிஉத் திர்மிதி, கிதாபுத் தஃவாத், பாடம், ஹதீஸ்: 3540)

ஆகவே, ஒரு மனிதன் இறைவனிடம் பணிவை மேற்கொண்டு செல்லும்போது எல்லா தவறுகளையும், எல்லாப் பாவங்களையும் அல்லாஹ் மன்னித்துவிடுகிறான். நிபந்தனை என்னவென்றால், மனிதன் இணை வைத்திருக்கக் கூடாது;


Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com


தவ்ஹீதின் உரிமையை செலுத்தியிருக்க வேண்டும். இது அவசியமாகும். நான் முந்தைய உதாரணத்தில் கூறியதுபோன்று, வெறும் வாயால் ஒப்புக்கொள்வது மட்டும் போதாது. அல்லாஹ் ஏகன் ஆவான் என்பதைச் செயல் ரீதியாக தனது ஒவ்வொரு செயலிலும் நிரூபணம் செய்ய வேண்டும்.

இதேபோன்று, தவ்ஹீதின் உயர்ந்த நிலையைக் குறித்து ஓர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் இறைவனிடம் வேண்டினார்கள்: 'என் இறைவா! உன்னை நினைவுகூரவும், உன்னிடம் துஆ செய்யவும் ஒரு விஷயத்தை நீ எனக்குக் கற்றுக்கொடு'. அதற்கு, அல்லாஹ் கூறினான்: 'மூஸாவே! '

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ

' என்று கூறும்!.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் கூறினார்கள்: 'என் இறைவா! உனது அடியார்கள் அனைவரும் இதைச் சொல்கிறார்களே'. அல்லாஹ் மீண்டும் கூறினான்: 'மூஸாவே! ' لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்று கூறுவீராக!

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் கூறினார்கள்: 'உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. என் இறைவா! எனக்கு மட்டும் பிரத்யேகமாக இருக்கும்படி ஒரு விஷயத்தை நான் விரும்புகிறேன்'.

அல்லாஹ் கூறினான்: 'மூஸாவே! என்னைத் தவிர ஏழு வானங்களும், அதில் வசிப்பவர்களும், ஏழு பூமிகளும் ஒரு தட்டில் வைக்கப்பட்டு, மற்றொரு தட்டில் ' لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ வைக்கப்பட்டால், لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ இருக்கும் தட்டே அந்த அனைத்து தட்டைக் காட்டிலும் கனமாக இருக்கும்.

அதாவது வானம் மற்றும் பூமியில் உள்ள அனைத்தும், நன்மைகள் என எதுவெல்லாம் இருக்கிறதோ அவை அனைத்தையும் ஒரு பக்கம் வைத்து, மறுபக்கம் لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ வைத்தால் அந்தத் தட்டே கனமாக இருக்கும்'.

(அல்-முஸ்தத்ரக் அலஸ் ஸஹீஹைன், கிதாபுத் துஆ, பாகம் 1, பக்கம் 710, ஹதீஸ்: 1936)

ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்ற கலிமா குறித்த ஓர் ஆட்சேபனைக்கு பதிலளித்தவாறு لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்பதன் உண்மைத்துவத்தை விளக்கியவாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் முகத்தஸ் நபியின் போதனை என்னவென்றால்,

لا اله الا الله محمد رسول الله

'என்று கூறுவதால் பாவங்கள் நீங்கிவிடுகின்றன. இது முற்றிலும் உண்மையாகும்.

எவர் அல்லாஹ்வை ஏகன் என்றும், இணையற்றவன் என்றும் அறிந்து, மேலும் முஹம்மது (ஸல்) அவர்களை அதே வல்லமை மிக்க ஏக இறைவன் தூதராக அனுப்பியுள்ளான் என்று ஏற்றுக்கொள்கிறாரோ, நிச்சயமாக அவருக்கு இந்த கலிமாவின் மூலம் நல்முடிவு ஏற்பட்டு, அவர் ஈடேற்றம் பெறுவார்'.

வானங்களுக்குக் கீழே எவரும் தற்கொலை மூலம் இரட்சிப்பு பெற்று விட முடியாது. ஒருபோதும் இல்லை. அவ்வாறு எண்ணம் கொள்பவனை விட பெரும் பைத்தியக்காரன் யார்? ஆனால், இறைவனை ஏகனாகவும், இணையற்றவனாகவும் கருதுவதும், மேலும் அவன் மிகவும் கருணை புரிந்து உலகை வழிகேட்டிலிருந்து மீட்க தனது தூதர் ஒருவரை அனுப்பினான்; அவரது பெயர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) ஆகும் என்றும் கருத வேண்டும். இது எத்தகைய ஒரு நம்பிக்கை என்றால், இதன் மீது நம்பிக்கை கொள்வதன் மூலம் ஆன்மாவின் இருள் நீங்கிவிடுகிறது; மேலும் மனயிச்சைகள் அகன்று தவ்ஹீத் அந்த இடத்தைப் பிடித்துக் கொள்கிறது. இறுதியில் தவ்ஹீதின் ஒரு வலிமை வாய்ந்த உணர்வு முழு இதயத்தையும் ஆட்கொண்டு, இந்த உலகிலேயே ஒரு சொர்க்க வாழ்க்கை தொடங்கி விடுகிறது.

ஒளியைக் கண்டால் இருள் விலகி விடுவதை நீங்கள் காண்பதைப் போன்று,' لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்ற ஒளி இதயத்தில் விழும்போது, மனயிச்சைகளின் இருள்களுக்கான உணர்வுகள் மறைந்துவிடுகின்றன.

கட்டுப்பாடாமை கலப்பதனால் மனயிச்சையின் உணர்வுகளால் ஏற்படும் கூச்சல் குழப்பமே பாவத்தின் உண்மைத்துவம் ஆகும். மனயிச்சையின் உணர்ச்சிகள் பொங்கி எழுகின்றன. அதனை பின்பற்றிய நிலையில் ஒரு நபருக்கு பாவம் செய்தவர் என்று பெயர் சூட்டப்படுகின்றது. இந்த நபர் மற்ற அமல்களை செய்யும்போதோ அவர் பாவம் இழைத்தவராகி விடுகின்றார்.

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ

என்பதற்கு, அரபு அகராதி மொழியில் பயன்படும் இடங்களுக்கு ஏற்ப பொருள் இவையாகும்: لَا مَطْلُوبَ لِي وَلَا مَحْبُوبَ لِي وَلَا مَعْبُودَ لِي وَلَا مُطَاعَ لِي إِلَّا اللّٰهُ

அல்லாஹ்வைத் தவிர எனக்குத் தேடப்படுபவர் எவருமில்லை; விரும்பப்படுபவர் எவருமில்லை; வணக்கத்திற்குரியவர் எவருமில்லை; கீழ்ப்படியத் தக்கவர் எவருமில்லை. அதாவது அல்லாஹ்வைத் தவிர எனக்கு வேறு நோக்கம் இல்லை, அவனையன்றி வேறு எவரையும் நான் நேசிக்கவில்லை; அவனையன்றி வேறு எவரையும் நான் வணங்கவில்லை ; மற்றும் பின்பற்றவில்லை.'

இந்தப் பொருள் பாவத்தின் உண்மைத்துவம் மற்றும் பாவத்தின் அசல் ஊற்றிலிருந்து முற்றிலும் எதிராக இருக்கின்றன. "எனவே எந்த நபர் இந்த அர்த்தங்களுக்கு தூய உள்ளத்துடன் தனது உயிரில் இடமளிப்பாரோ"

இந்த விஷயம் சிந்திக்கக் தக்கதாகும். கூறப்பட்டுள்ள இந்த விஷயங்களை எவர் ஒருவர் தூய மனதுடன் தனது உள்ளத்தில் இடமளிப்பாரோ, அவரது உள்ளத்திலிருந்து இந்தப் பொருளுக்கு எதிரான விஷயங்கள் வெளியேறி விடும். மேலும் வேறு எந்த விஷயமும் அவரிடம் எஞ்சியிருக்காது. ஏனெனில் பின்னர் அவர் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல்

செய்பவராக இருப்பார். அவனது ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டவராக இருப்பார். ஏனெனில், நேரெதிரான விஷயங்கள் ஓரிடத்தில் ஒன்று கூட முடியாது. இரண்டு முரண்பட்ட பொருட்கள் ஒன்றுகூடுவதில்லை.

எனவே மனயிச்சையின் உணர்ச்சிகள் முற்றிலும் வெளியேறி விடுகின்றன. எந்த நிலை உண்மையான தூய்மை மற்றும் உண்மையான நேர்மை என்று கூறப்படுகின்றதோ அதுவே இந்த நிலையாகும்.

கலிமாவின் இரண்டாவது அம்சத்தின் பொருளாகிய இறைவனால் அனுப்பப்பட்டவரின் மீது ஈமான் கொள்ளுதலின் அவசியம் இதுவாகும். அதாவது இறைவனின் வேதத்தின் மீதும் ஈமான் ஏற்பட்டு விட வேண்டும் என்பதாகும். ஏனெனில், நான் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டவனாக ஆக விரும்புகின்றேன் என்று எந்த நபர் ஒப்புக் கொள்கின்றாரோ அவர் இறைவனின் கூற்றுகளின் மீது நம்பிக்கை கொள்வதும் அவசியமாகும். இறை வேதத்தின் மீது நம்பிக்கை கொள்வது என்பது எவர் மூலமாக அந்த வேதம் உலகிற்கு வந்ததோ அவர் மீது நம்பிக்கை கொள்ளாமல் சாத்தியமற்றதாகும்.

அதாவது எவர் மூலமாக அல்லாஹ் நமக்கு தூதுச் செய்தியை அனுப்பினானோ அவர் மீது ஈமான் கொள்வதும் அவசியமாகும்.

ஆக, இதுவே கலிமாவின் உண்மைத்துவம் ஆகும். (நூருல் குர்ஆன், எண்: 2, ரூஹானீ கஸாயின், தொகுதி 2, பக்கம் 418 - 420)

ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு நாள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எங்களிடம் இவ்வாறு உரையாற்றினார்கள்:

'ஷிர்க்கிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் இது எறும்பின் கால்தடத்தை விட நுணுக்கமானதாகும்.'

அதாவது எறும்பின் கால்தடம் இருக்கின்றதே அதனையும் விட இந்த ஷிர்க் நுட்பமானதாகும். அப்போது, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எறும்பின் கால்தடத்தை விட நுணுக்கமான அதிலிருந்து நாங்கள் எப்படி தப்பிப்பது?' என்று ஒருவர் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டார். அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இந்த துஆவை ஓதுங்கள்:

اَللّٰهُمَّ اِنَّا نَعُوْذُبِكَ مِنْ اَنْ نُشْرِكَ بِكَ
شَيْئًا نَعْلَمُهُ وَنَسْتَغْفِرُكَ لِمَا لَا نَعْلَمُ

பொருள்: இறைவா! நாங்கள் அறிந்தே உனக்கு எதையும் இணையாக்குவதிலிருந்து உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறோம். நாங்கள் அறியாமல் செய்தவற்றிற்கு உன்னிடம் பாவமன்னிப்புத் தேடுகிறோம்.

எப்போதும் துஆ செய்து கொண்டிருங்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹன்பல், தொகுதி 6, பக்கம் 614 - 615, ஹதீஸ் எண்: 19835, ஆலமுல் குதுப், பெய்ரூத், 1998-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அப்ஸா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலை எழுந்த உடன் இந்த துஆவை செய்து வந்தார்கள்.

اَصْبَحْنَا عَلٰى فِطْرَةِ الْاِسْلَامِ وَعَلٰى كَلِمَةِ
الْاِخْلَاصِ وَعَلٰى دِيْنِ نَبِيِّنَا
مُحَمَّدٍ صلى الله عليه وسلم وَعَلٰى
مِلَّةِ اَبِيْنَا اِبْرَاهِيْمَ حَنِيْفًا
مُسْلِمًا وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِيْنَ

பொருள்: 'நாங்கள் இஸ்லாமிய இயல்பிலும், ஏகத்துவத்தின் தூய கலிமாவிலும், எமது நபி முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கத்திலும், ஏகத்துவத்தின் முஸ்லிமாக இருந்த எமது தந்தை இப்ராஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்திலும் அதிகாலையை அடைந்தோம். அவர் இணை வைப்பவர்களில் ஒருவராக இருக்கவில்லை.'

**அதிகாலையில் எழுந்து அவனை நினைவு கூருங்கள். எப்போதும் முதலில் அல்லாஹ்வை நினைவு கூருங்கள்.**

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மாலைப் பொழுதை அடையும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த துஆவை செய்து வந்தார்கள்:

اَمْسَيْنَا وَاَمْسَى الْمُلْكُ لِلّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ
لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَه

'நாங்களும், முழு உலகமும் அல்லாஹ்விற்காக மாலையை அடைந்தோம். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு யாருமில்லை. அவன் ஏகன், அவனுக்கு இணை யாரும் இல்லை.' (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுத் திக்ர் வத் துஆ, ஹதீஸ் எண்: 2723)

அப்துல்லாஹ் பின் புரைதஃ அஸ்லமீ தமது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு மனிதர் இவ்வாறு பிரார்த்தனை செய்வதை செவிமடுத்தார்கள்:

'அல்லாஹ்வே! நீயே அல்லாஹ்; உன்னைத் தவிர வேறு வணக்கத்திற்குரியவர் இல்லை, நீ தனித்தவன்; நீ எந்தத் தேவையுமற்றவன்; நீ எவரையும் பெறவுமில்லை; மேலும் எவராலும் பெறப்படவுமில்லை, உனக்கு நிகர் எவருமில்லை என்று நான் சாட்சி கூறி உன்னிடம் வேண்டுகிறேன்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: இதைச் செவியுற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எனது உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது ஆணையாக! இவர் அல்லாஹ்விடம் அவனது மகத்தான பெயரைக் கொண்டு வேண்டினார். அதன் மூலம் துஆ செய்யப்படும்போது அல்லாஹ் நிச்சயம் ஒப்புக் கொள்கிறான், அதன் மூலம் வேண்டப்பட்டாலோ அவன் வழங்குகின்றான். (ஜாமிஉத் திர்மிதி, ஹதீஸ் எண் 3475)

ஹஸ்ரத் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள்:

நீங்கள் கடுமை மற்றும் துன்பத்தின் வேளையில் ஓத வேண்டிய அந்த வார்த்தைகளை நான் உங்களுக்குக் கற்றுத் தரட்டுமா? அந்த வார்த்தைகள் இவையாகும்:

اَللّٰهُ اَللّٰهُ رَبِّيْ لَا اُشْرِكُ بِهٖ شَيْئًا

**அல்லாஹ்வே! என் இறைவன் ஆவான்; அவனுக்கு நான் எதனையும் இணையாக்க மாட்டேன்).'**

(ஸுனன் அபூ தாவூத், கிதாப் அல்-வித்ர்)

துன்பத்தில் இருக்கும்போது என்ன ஓத வேண்டும்? என்று மக்கள் கேட்கின்றனர். அவற்றில் இதுவும் ஒன்றாகும். ஓர் அறிவிப்பில் வருகின்றது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பதற்றத்தின் போது இவ்வாறு துஆ செய்வார்கள்:

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ الْعَظِيْمُ الْحَلِيْمُ، لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ
رَبُّ السَّمٰوَاتِ وَالْأَرْضِ، وَرَبُّ الْعَرْشِ الْعَظِيْمِ

பொருள்: கண்ணியமிக்கவனும், நிதானமானவனுமாகிய அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. மகத்தான அர்ஷின் இறைவனாகிய அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை.(ஸஹீஹ் புஹாரி, ஹதீஸ் எண்: 6345 )

எத்தகைய நுட்பத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்கு வலியுறுத்தி வந்துள்ளார்கள்!

ஓர் அறிவிப்பில் வருகின்றது. அபூ ரிம்ஸஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். எனது தந்தையார் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம், தங்களின் முதுகில் உள்ள அந்த விஷயத்தை எனக்கு தாங்கள் காட்டித் தாருங்கள் என்று வேண்டினார்கள்.

அதாவது நபித்துவ முத்திரையை காட்டும்படி வேண்டினார்கள்.

ஏனெனில், நான் மருத்துவர் ஆவேன்.

அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வே குணப்படுத்துபவன் ஆவான்; மாறாக, நீரோ நண்பர் ஆவீர். நோயாளிக்கு ஆறுதல் அளிப்பவர் மட்டுமே ஆவீர். அதை படைத்தவனே மருத்துவன் ஆவான், அவனே அதற்கு குணமளிப்பவன் ஆவான்.'

(ஸுனன் அபூ தாவூத், ஹதீஸ் எண்: 4207)

ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ' அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை, அவன் ஏகனாவான், அவனுக்கு இணை யாரும் இல்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், தூதரும் ஆவார்கள் என்றும், ஈஸா (அலை) அல்லாஹ்வின் அடியாரும், அவனது அடிமையின் மகனும் ஆவார்; மேலும் அவர் இறைவனால் மர்யமிற்கு வழங்கப்பட்ட வார்த்தையும், அவரிடமிருந்து வந்த ஆன்மாவும் ஆவார் என்றும், சொர்க்கம் உண்மையாகும்; நரகம் உண்மையாகும் என்றும் சாட்சி கூறுகிறாரோ, அல்லாஹ் அவரை சொர்க்கத்தின் எட்டு வாசல்களில் அவர் விரும்பும் வாசல் வழியாக நுழையச் செய்வான்.

உமைர் பின் ஹானீ இதே சான்றின் அடிப்படையில் இந்த அறிவிப்பை செய்கின்றனர். அல்லாஹ் அவரை சொர்க்கத்தில் நுழையச் செய்வான் அவரது அமல் எப்படி இருந்தாலும் சரியே என்ற இந்த அறிவிப்பை அவர்களும் ஆமோதித்துள்ளார்கள். இவ்வாறு கூறினார்கள் என்ற இந்த விஷயம் வரை சரி. ஆனால், சொர்க்கத்திற்கு எட்டு வாசல்களில் எதிலிருந்து நுழைவதை விரும்புவாரோ நுழைவார் என்று கூறியிருக்கவில்லை. அதாவது மற்ற அறிவிப்புகளில் அதன் எட்டு வாசல்களைப் பற்றிய குறிப்பு இல்லை. (ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 28)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்தின் அடித்தளம் ஐந்து விஷயங்களின் மீது உள்ளது. அவை இவையாகும். அல்லாஹ்வை வணங்க வேண்டும். மேலும் அவனைத் தவிர வேறு எதனையும் வணங்குவதை நிராகரிக்க வேண்டும். மேலும் தொழுகையை நிலைநாட்ட வேண்டும். ஸகாத் செலுத்த வேண்டும். பைத்துல்லாஹ்விற்கு ஹஜ் செய்ய வேண்டும். மேலும் ரமலானின் நோன்புகளை நோற்க வேண்டும். (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான், ஹதீஸ் எண்: 16)

ஹஸ்ரத் யஸீரஃ (ரலி) அவர்கள் முஹாஜிர் பெண்களைச் சார்ந்தவராக இருந்தார்கள். அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்களாகிய உங்கள் மீது தஸ்பீஹ் (சுபஹானல்லாஹ்) செய்வதும், தஹ்லீல் (லா இலாஹ இல்லல்லாஹ்) கூறுவதும் மற்றும் தூய்மையை எடுத்துரைப்பதும் அவசியமாகும். **அலட்சியம் செய்து அதன் விளைவாக தவ்ஹீதை மறந்துவிடாதீர்கள். மேலும் உங்கள் விரல்களால் எண்ணுங்கள், ஏனெனில் நிச்சயமாக மறுமை நாளில் அவற்றிடம் கேள்வி கேட்கப்படும். அவற்றிடம் பேசும்படி கூறப்படும். அதாவது, விரல்களால் எண்ணியும் திக்ரே இலாஹி செய்யுங்கள். அல்லாஹ்வின் தூய்மையை எடுத்துரையுங்கள். அல்லாஹ்வின் ஏகத்துவத்தை எடுத்துரையுங்கள். மேலும் அவனை புகழுங்கள்.** (முஸ்தத்ரக் அலஸ் ஸஹீஹைன், தொகுதி 1, பக்கம் 732, ஹதீஸ் 2007)

எனவே இந்த விஷயத்தை உம்மத்தினரின் உள்ளங்களில் அமர்த்தக் கூடிய எந்த சந்தர்ப்பத்தையும், எந்த சபையையும், எந்தக் கூட்டத்தையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நழுவ விட்டதில்லை. அங்கு அல்லாஹ்வின் ஏகத்துவம் மற்றும் அவனது மகத்துவத்தை நிலைநாட்டுவதற்கான அறிவுரையை வழங்காமல் அன்னார்(ஸல்) இருந்ததில்லை.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் எழுதுகின்றார்கள். இன்னும் கூறப்போனால், அன்னார் (ரலி) ஒரு குத்பாவிலேயே எடுத்துரைத்துள்ளார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு இது தொடர்பாக எந்த அளவு உத்வேகம் இருந்தது என்றால், அன்னாருடைய எதிரிகள் கூட இந்த விஷயத்தை ஒப்புக் கொள்கின்றனர். அதாவது அன்னார் (ஸல்) எழும்போதும், அமரும்போதும், நடக்கும்போதும், எந்நேரமும் இறைவனையே அழைத்து வந்தார்கள்.

ஆக, ஃபிரான்ஸ் நாட்டின் ஒரு வரலாற்றாசிரியர் அல்ஃபோன்ஸோ தே லாமார்ட்டினீ (ஆங்கிலம்) என்பவர் எழுதுகின்றார்:

நீங்கள் என்ன கூறினாலும் சரி! நீங்கள் முஹம்மது (ஸல்) மீது என்ன ஆட்சேபனை செய்தாலும் சரி! எனக்கு எப்படிப்பட்ட ஒரு விஷயம் அவரிடத்தில் தென்படுகிறது என்றால், (அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் தென்படுகிறது என்றால்) உலகம் தோன்றிய நாள் முதல் இது வரை வேறு எந்த நபரிடமும் இந்த விஷயம் தென்படவில்லை.

இது எத்தகைய விஷயம் என்றால், இதனை நான் வேறு எவரிடத்திலும் காணவில்லை. அந்த விஷயம் இதுவாகும். அதாவது, அவர் எந்த நேரத்திலிருந்து நபித்துவத்திற்கான அறிவிப்பை செய்தாரோ அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபித்துவ வாதத்திற்கான அறிவிப்பை செய்தது முதல் மரணம் வரை அவரது நாவில் ஒரேயொரு சொல்தான் இருந்தது. அது அல்லாஹ் என்ற சொல்லாகும். ஒருவகையில் அவருக்கு இறைவனை (மக்கள்) ஏற்கச் செய்ய வேண்டும்; மேலும் அவனை உலகில் வெளிப்படுத்த வேண்டும் என்ற ஒரு பித்து இருந்தது; பைத்தியம் இருந்தது.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போதும் இறைவன்! இறைவன்! என்று கூறுகின்றார்கள் என எந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தப் பணியை பைத்தியம் என்று கூறுகின்றார்களோ அவர்களும் கூட, இறைவனையும், இறைவனின் ஏகத்துவத்தையும் ஏற்கச் செய்யக் கூடிய பணியே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முக்கியத்துவம் வாய்ந்த, பெரிய மற்றும் முதற் பணியாக இருந்தது என்பதை ஒப்புக் கொள்கின்றனர். இது எத்தகைய விஷயம் என்றால், இந்த பித்துப் பிடித்தவர்களை பிற்காலத்தில் வந்த மக்கள் முழுமையானவராக கருதினர். மேலும், ஒருவேளை முழுமையானவராக கருதவில்லை என்றாலும், குறைந்தபட்சம் இவ்வளவு உறுதியையாவது கொண்டார்கள். ஒருவேளை ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் சரியே! பகல், இரவாக இறைவனை நினைவு கூர்ந்து கொண்டும், அவனது ஏகத்துவத்தை மக்கள் ஏற்கச் செய்வதற்கான வேட்கையிலேயே எப்போதும் திளைத்துக் கொண்டும் இருக்கும் இத்தகைய நபர் தீயவராக இருக்க முடியாது.

எப்படியிருப்பினும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இந்த நிலையைப் பார்க்கும்போது, அன்னாரும் மற்றும் ஏனைய அனைத்து நபிமார்களும் உலகிற்கு வருகை தந்ததன் நோக்கம் இதுவே ஆகும். - அதாவது இணைவைத்தலை ஒழிப்பதும், இறைவனின் ஏகத்துவத்தை உலகில் பரப்புவதுமே அந்த நோக்கம் ஆகும் என்பது தெரிய வருகிறது. (குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 9, பக்கம் 260-261)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இதனையும் எழுதியுள்ளார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் அந்தஸ்து எவ்வளவு உயர்வானது என்பதையும், அன்னார் (ஸல்) மீது நாம் எவ்வளவு அன்பு கொண்டுள்ளோம் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இதனையும் அன்னார் (ரலி) ஒரு குத்பாவில் எடுத்துரைத்திருந்தார்கள்:

எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வுடைய மகிமை அன்னாரின் மகிமையை விட மிகவும் உயர்ந்தது; அல்லாஹ் ஆதியந்தமற்றவன் ஆவான்;

மேலும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அவனது அருட்கொடைகளில் மிகப்பெரிய ஒரு அருட்கொடையாவார்கள். நாம் நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனுடைய அந்தஸ்தை பறிக்கும் வகையிலான ஒரு அந்தஸ்தை வழங்குவது என்பது அன்னாரின் மீதான மிகப் பெரிய பகைமையாக இருக்கும், ஏனெனில், அல்லாஹ்வுக்கு இணையான ஓர் அந்தஸ்தை நபி (ஸல்) அவர்களுக்கு வழங்குவதை (நான் ஹதீஸ்களில் இருந்து முன்னர் எடுத்துரைத்தது போன்று) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே கூட ஒருபோதும் விரும்பியதில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனுக்கு நிகரான அந்தஸ்து வழங்கப்படுவதையும் அல்லது அதையும் விட மேலான அந்தஸ்து வழங்கப்படுவதையும் அன்னார் (ஸல்) விரும்பவில்லை என்பதற்கும், அன்னாரின் ஒவ்வொரு செயலும் போதுமான சான்றாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு என்னென்ன பெரும், பெரும் பணிகளுக்கு நற்பேறு கிடைத்தனவோ அவை பெரும் வலிமையான இறை வல்லமையின் பணிகளாக இருந்தன. அவை ஒரு மனிதனின் சக்திக்கு உட்பட்டதன்று.

ஆக, அவற்றை அல்லாஹ்வின் வல்லமையினால் மட்டுமே செய்ய முடிந்திருந்தது. அப்படிப்பட்ட பணிகளை பெரும் பலம் படைத்த மனிதனால் கூட செய்ய முடியாது.

ஆனால், உயிர் பிரியும் தருவாயில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நிலைமை மிகவும் கடினமாக இருந்தது. அந்த நேரத்தில் அவர்கள் மிகுந்த வேதனையை அனுபவித்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'கடினமான மரண வேதனையை அனுபவிப்பவர் நல்ல மனிதராக இருக்க முடியாது என்று நான் முன்பு நினைத்திருந்தேன். அதாவது, மரணத்தின் போது அமைதியற்ற நிலையில் இருப்பவர் நல்லவராக இருக்க முடியாது என்று கருதியிருந்தேன். ஆனால், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மரண வேதனையைக் கண்ட பிறகு எனது கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று.' அந்த உச்சகட்ட வேதனையின் போது கூட, அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் அந்தஸ்தைப் பற்றி எந்த அளவிற்கு எண்ணம் கொண்டிருந்தார்கள் என்றால், அன்னார் (ஸல்) இந்த விஷயத்தை அறிந்திருந்தார்கள். அதாவது தம்மைப் பின்பற்றுபவர்கள் தம் மீது அளவற்ற அன்பு வைத்துள்ளனர் என்பதை அறிந்திருந்தார்கள். என்னைப் பின்பற்றுபவர்களுக்கு என் மீது இந்த அளவிற்கு அன்பு உள்ளது; எனவே எனது அந்தஸ்தைப் பற்றி அவர்கள் மிகைப்படுத்தி விடக்கூடும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அதனால்தான், அந்த வேதனையான நேரத்திலும் அன்னாரின் நாவிலிருந்து மீண்டும் மீண்டும், 'யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டுமாக; ஏனெனில் அவர்கள் தங்களது நபிமார்களின் கல்லறைகளை வழிபாட்டுத் தலங்களாக மாற்றிக் கொண்டனர்' என்று கூறிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தனது சமூகத்திற்கு வழங்கிய இறுதி அறிவுரையும், இறுதிப் பாடமும் இதுவாகவே இருந்தது. அதாவது, எனக்கு இணைவைத்தலுக்குரிய அந்தஸ்தை வழங்கிவிடாதீர்கள். நீங்கள் அவ்வாறு செய்தால் நான் அதில் மகிழ்ச்சியடைய மாட்டேன்; மாறாக, எனது ஆன்மா அத்தகைய செயலைச் செய்பவர்கள் மீது சாபமிடும்.'

'எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களாகவே இருந்தாலும் சரியே. அன்னாருக்கு இறைவனின் அந்தஸ்தை குறைப்பதற்கு காரணியாக அமையும் அந்தஸ்தை வழங்குவது என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகிழ்ச்சிக்கு காரணியாக இருக்காது. மாறாக அவ்வாறு செய்பவர் மீது அன்னாரின் சாபம் உண்டாகும். மரண நேரத்தில் விடப்படும் சாபம் மிகவும் ஆபத்தானதாகும். உண்மையான மார்க்கத்தைப் பின்பற்றாதவர்கள் - உதாரணமாக இந்துக்கள் இருக்கின்றனர். அவர்கள் கூட மரண நேரத்தில் விடப்படும் சாபத்தைக் கண்டு மிகவும் அஞ்சுகின்றனர். பெற்றோர்கள் இறக்கும் போது இடும் சாபத்திற்கு மக்கள் பயப்படுகிறார்கள். ஆனால், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அப்படிப்பட்ட வேளையில், உங்கள் மீது சாபம் உண்டாகும் என்று கூறியுள்ளார்கள். அதாவது அனைத்து நபிமார்களுக்கும் தலைவரான அன்னார் (ஸல்) தாம் மரணிக்கும் தருவாயில் இப்படி ஒரு சாபத்தை இட்டிருக்கும்போது, அதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்? இது எவ்வளவு பெரும் சாபமாகும். அதிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள வேண்டும். ஆனால், நான் ஏற்கனவே கூறியது போல், அன்னாரின் கல்லறைகள் அவ்வாறில்லை; ஆனால், பிச்சையெடுப்பவர்கள் மற்றும் ஃபக்கீர்மார் போன்றவர்களின் கல்லறைகளில் தான் இத்தகைய காரியங்கள் செய்யப்படுகின்றன. அண்ணல் நபி (ஸல்) அவர்களின் துஆவிலே இந்த சாபம் உள்ளது.'

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 20, பக்கம் 600-601)

எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொண்டவர்களாக நாம் இருக்கின்றோம். நாம், ஏகத்துவத்தின் உண்மைத்துவத்தின் புரிதலை உருவாக்கி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஏகத்துவத்தை நிலைநாட்டத் துடித்த அந்த வேதனையை புரிந்து, அதற்காக முழு முயற்சி செய்து, உண்மையான ஏகத்துவவாதிகளாக நாம் மாற வேண்டும். அதற்கு அல்லாஹ் நமக்கு நற்பேறு வழங்குவானாக.'

போர்ச் சூழல்களும் மென்மேலும் மோசமடைந்து கொண்டு செல்கின்றன. அமெரிக்காவும், இஸ்ரேலும் முழு உலகிலும், குறிப்பாக முஸ்லிம் உலகிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சிக்கின்றன. இஸ்ரேல் அதிபர் பாலஸ்தீனப் போர் தொடங்கிய போது, முதல் முறை தாக்குதல் தொடுத்தபோது, இந்த பிராந்தியத்தின் வரைபடம் இன்னும் கூறப்போனால், ஒட்டுமொத்த அரபு நாடுகளின் வரைபடமே மாற்றப்படும் என்று கூறியிருந்தார்.

ஆக, இது வரைபடத்தை மாற்றுவதற்கான முயற்சியாகும். இவர்கள் எந்தப் பக்கம் செல்கின்றனர் என்பதை முஸ்லிம் உலகம் இப்போதாவது புரிந்து கொள்ள வேண்டும். எனவே அவர்கள் ஒன்றாகுவது மிகவும் அவசியமாகும்.

' அமெரிக்காவுடன் ஈரான் மற்றும் அரபு நாடுகளுக்கு சமாதானத்தை ஏற்படுத்த பாகிஸ்தான் முயற்சிப்பதாகக் கேள்விப்படுகிறோம். இதிலும் கூட ஈரானின் சில வட்டாரங்களுக்கு தப்பெண்ணம் ஏற்பட்டு விட்டது. இதுவும் தவறாகும். இன்னும் கூறப்போனால், ஈரானின் சில மட்டங்களில் இந்த அளவிற்கு பழிசுமத்தப்படுகிறது. அதாவது ஈரானின் கற்றறிந்த மக்களிடத்தில் அல்லது ஆய்வாளர்களிடம் இவ்வாறு கூறப்படுகின்றது; அதாவது, ஈரானுடன் ஆன எல்லையில் பாகிஸ்தான் தனது பகுதியில் அமெரிக்கப் படைகளுக்குப் பயிற்சியளிக்கின்றது; அவர்களுக்கு உதவி செய்கின்றது. அல்லது ஈரானுக்கு எதிராகப் போரிடும் நபர்களுக்கு பாகிஸ்தான் உதவி செய்கின்றது என்றும் குற்றம் சாட்டுகிறார்கள்.

எப்படியிருப்பினும், இது முற்றிலும் தவறான விஷயமாகும். பாகிஸ்தான் இதனை மறுத்துள்ளது.'

' எதிரி இந்த நிலைமைகளைப் பயன்படுத்தி அமைதியின்மையை ஏற்படுத்த விரும்புகின்றான். இதன் மூலம் முஸ்லிம் நாடுகள் ஒருபோதும் ஒருவர் மற்றவருக்கு உதவியாளராக ஆகாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கின்றான். எனவே, நாம் அதிகமாக துஆக்கள் செய்வது அவசியமாகும். அல்லாஹ் இந்த அடிப்படையிலும் நமக்கு துஆக்கள் செய்வதற்கு நற்பேறு வழங்குவானாக. மேலும், இஸ்லாமிய நாடுகளை ஒற்றுமை எனும் சரடில் ஒன்றிணைவதற்கு நற்பேறு வழங்குவானாக!

(அல்-ஃபழ்ல் இன்டர்நேஷனல், ஏப்ரல் 17, 2026, பக்கம் 8)

தமிழாக்கம்
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

***** ******

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 21 MAY 2026 Issue No. 21

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

முதல் பக்கத் தொடர்ச்சி ......
(தப்ஸீரே கபீர்..)

முதலில், ஒருவரிடம் கடன் வாங்கினால், அதைத் திருப்பிச் செலுத்துவதற்கான நேரத்தை நிர்ணயம் செய்யுங்கள். இரண்டாவதாக, கொடுக்கல் வாங்கல் விவகாரங்களை எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்யுங்கள்.'

இந்த நிபந்தனையின் மிகப் பெரிய நன்மை என்னவென்றால், கடன் வாங்கியவருக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற பொறுப்புணர்வு இருக்கும். அவர் அதைச் செலுத்த முயற்சிப்பார். மேலும், கடன் வாங்கியவர் ஒரு குறிப்பிட்ட காலக்கெடு வரை நிம்மதியாக இருப்பார், கடன் கொடுத்தவர் எப்போது வந்து பணத்தைக் கேட்பாரோ என்ற பயம் அவருக்கு இருக்காது. இது கடன் கொடுப்பவர் மற்றும் வாங்குபவர் ஆகிய இருவருக்கும் பயனுள்ளதாக இருக்கும். கடன் கொடுப்பவரின் பயன் இதுவாகும். அதாவது, உதாரணமாக, ஒரு மாதத்திற்கான வாக்குறுதி உள்ளது என்றால், அவர் ஒரு மாதம் கழித்துச் சென்று கடனைக் கேட்பார். அவருக்குத் தினம் தினம் இதைப் பற்றி கேட்க வேண்டிய அவசியம் ஏற்படாது. கடன் வாங்கியவரின் பயன் என்னவென்றால், நான் எவ்வளவு காலத்திற்குள் கடனை திருப்பிச் செலுத்த வாக்குறுதி அளித்துள்ளேனோ அந்த காலகட்டத்திற்குள் என்னால் பணத்தைத் திருப்பித் செலுத்த முடியுமா? முடியாதா? என்பதை அவர் சிந்திப்பார்.

இது மட்டுமின்றி இந்த ஒரு நிபந்தனை இதனாலும் விதிக்கப்பட்டுள்ளது. அதாவது, சில பலவீனமானவர்கள் 'ஆட்சேபனை செய்யக் கூடும். அதாவது, நாங்கள் வட்டிக்கு ஏன் பணம் கொடுக்கிறோம் என்றால், கடன் வாங்குபவர் அதைத் திருப்பிச் செலுத்துவது குறித்து கவலைப்படுவார்; விரைவில் கடனில் இருந்து விடுபட முயற்சிப்பார்' . ஆனால், வட்டி இல்லையெனில் அவருக்கு அந்தத் திருப்பிச் செலுத்தும் உணர்வு இருக்காது.

இந்த சந்தேகத்தை நீக்கவே அல்லாஹ் கூறுகின்றான்: 'நீங்கள் ஒருவருக்கொருவர் கடன் கொடுக்கும்போது இன்ன காலத்திற்குள் நான் திருப்பிக் கொடுத்து விடுவேன் என்று ஓர் ஒப்பந்தத்தை எழுதிக் கொள்ளுங்கள். அந்நிலையில், உங்கள் பணமும் பாதுகாப்பாக இருக்கும், மற்ற நபருக்கும் தனது பொறுப்புணர்வு இருக்கும்.'

ஆனால், இதன் பொருள் இது கிடையாது. அதாவது.. கடன் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்காக இருந்தால் மட்டும் எழுதிக் கொள்ளுங்கள்; இல்லையென்றால் நீங்கள் எழுத வேண்டாம் என்பதன்று. எனவே ஒரு நபர் ஒருவருக்கு கடன் கொடுக்கின்றார் என்றால், பின்னர் எவ்வாறிருப்பினும் அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்காகவே கொடுக்கின்றார். அந்தக் காலக் கெடு குறுகியதாக இருந்தாலும் அல்லது நீண்டதாக இருந்தாலும் சரியே! அதன் பிறகு அதனை வசூல் செய்வதற்கு உரிமை படைத்தவர் ஆவார்.

ஒருவர் மற்றவருக்குக் கடன் கொடுத்து விட்டு, பின்னர் அதைப் திரும்பப் பெறுவதற்கான உணர்வே அவருக்கு இல்லை என்ற நிலை ஒருபோதும் ஏற்படுவதில்லை. அன்பளிப்பாகவோ அல்லது உதவியாகவோ ஒருவருக்கு ஏதாவது தொகை கொடுக்கப்பட்டால் பின்னர் அது வேறு விவகாரமாகும்.

ஆனால், எதை 'கடன்' என்ற வார்த்தை குறிப்பிடுகிறதோ, அதற்கு 'குறிப்பிட்ட காலம்' என்ற சட்டம் பொருந்தும். அது வாயால் சொல்லப்பட்டாலும் சரி! அல்லது காலம் குறிப்பிடப்படாவிட்டாலும் சரியே! ஆயினும், குறிப்பாக கடனைத் திருப்பி செலுத்த எந்தவொரு குறிப்பிட்ட காலமும் நிர்ணயிக்கப்படவில்லை என்றால், இன்னும் கூறப்போனால் ஓரிரு மணிநேரத்திற்கு அல்லது ஓரிரு நாட்களுக்கானதாக இருந்தால் பின்னர் அப்படிப்பட்ட நிலையில் எழுதப்படாவிட்டால் அது ஷரீஅத் ரீதியில் எந்தக் குற்றமும் இல்லை.

வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், முஸ்லிம்கள் இந்த இரண்டு விஷயங்களையும் பொருட்படுத்துவதில்லை. அதாவது கடன் கொடுக்கும் போது நட்பு மற்றும் அன்பின் காரணமாக எந்தக் காலக்கெடுவையும் நிர்ணயிப்பதில்லை. மாறாக, 'எப்போது வேண்டுமானாலும் திருப்பிக் கொடுங்கள்' என்று கூறிவிடுகின்றனர். மேலும் அதை எழுத்துப்பூர்வமாகவும் பதிவு செய்வதுமில்லை. இதன் காரணமாகப் பின்னாட்களில் பல பிரச்சனைகள் உருவாகின்றன, அவர்களுக்கு அதன் கசப்பான விளைவுகளைச் சந்திக்க நேரிடுகின்றது.

وَلْيَكْتُبْ بَيْنَكُمْ كَاتِبٌ بِالْعَدْلِ

மூன்றாவது கட்டளையாக வழங்கியுள்ளான்.

அதாவது, எழுதுபவர் வேறு ஒரு நபராக இருக்கட்டும்! அவர் கடன் கொடுப்பவரும், கடன் வாங்குபவரும் எழுதுபவராக இருக்க வேண்டாம். மாறாக, மூன்றாம் நபர் ஒருவர் எழுதட்டும். அவர் நீதியுடனும் நேர்மையுடனும் எழுத வேண்டும். அவர் தனது தரப்பிலிருந்து எந்த விஷயத்தையும் சேர்க்கக் கூடாது. மாறாக, அவருக்கு எதனை எழுதும்படி கட்டளையிடப்பட்டதோ அதை அப்படியே எழுத வேண்டும்.

அடுத்து, எழுத்தாளருக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது: அவர் எழுதுவதற்கு மறுக்கக் கூடாது. மாறாக, அல்லாஹ் அவருக்கு எப்படிக் கற்றுக் கொடுத்துள்ளானோ அப்படியே அதனை அவர் எழுத வேண்டும். كَمَا عَلَّمَهُ என்பதன் இரண்டு அர்த்தங்கள் இருக்கலாம்: ஒன்று, அவர் பெற்ற திறமைக்கு ஏற்ப எழுத வேண்டும்; மற்றொன்று, அல்லாஹ் அவர் மீது அருள் செய்துள்ளான்; எனவே அவரும் மற்றவர்களுக்குப் பயனளிக்க வேண்டும். அவர் மறுத்து, தேவையுடையவர் கடன் கிடைக்காததன் காரணத்தினால் துன்பத்திற்கு உள்ளாக்கக் கூடாது. (தஃப்ஸீரே கபீர் தொகுதி 1, பக்கம் 283)

* * * * * * *

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad